Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



Newspaper Reg.No.TNBIL/2003/12746, licensed to post with
prepayment with postal Reg. No. Try/041/2017 - 2019
Posted at RMS, Trichy Junction, Trichy-620 001
Date of Posting - 5th of Every Month

To

______________________________

______________________________

______________________________

டெலிவரி ஆகாவிடில் கீழ்காணும் முகவரிக்கு தயவு செய்து திருப்பி அனுப்பவும்
**தி பிரிண்டிங் ஹவுஸ், காஜாமலை, திருச்சிராப்பள்ளி - 620 023.**

**பதிப்பாசிரியர் குழு**

1. **முனைவர் T.N. கோகுல்நாத் பாபு,** மாநிலத் தலைவர்
2. **பேரா. இ.பி. பெருமாள்,** மாநில பொதுச் செயலாளர், பதிப்பாசிரியர்
3. **பேரா. எம். பாலசுப்ரமணியன்,** மாநிலப் பொருளாளர்
4. **முனைவர் ந. மாரிசாமி,** மாநிலத் துணைத் தலைவர்
5. **முனைவர் ம.இராஜகோபால்,** மாநிலத் துணைத் தலைவர்
6. **பேரா. பார்வதி கோபாலன்,** மாநிலத் துணைத் தலைவர்
7. **பேரா. ஆர். பாக்கியலட்சுமி,** மாநில இணைச் செயலாளர்
8. **பேரா. S. சிவசண்முகம்,** மாநில இணைச் செயலாளர்
9. **பேரா. S. சந்திரா,** மாநில மகளிர் ஒருங்கிணைப்பாளர்

**TANRECTA SPEAKS - TNBIL/2003/12746**

Owned, Edited and Published by Prof. E. P. Perumal, The General Secretary, Tamil Nadu Retired College Teachers' Association.

Printed by S. Zeenath Beevi at The Printing House, No.6, Race Course Road, Khajamalai, Trichy-620 023. Ph : (0431) 2420121, 94435 87233
Email : tanrectatrichy@gmail.com

# TANRECTA SPEAKS

Voice - XVII OCTOBER - 2018 Speech 4

TANRECTA

# தமிழ் நாடு ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர் கழகம்

**பதிவு எண். 236/2000**



*பேரா. நரசிங்கம்*

**Tamil Nadu Retired College Teachers' Association**

Newspaper Regn. No. TNBIL/2003/12746
Website: www.tanrecta.org
Rs. 4 per copy - Subscription (Annual) Rs. 40

3/671, First Street,
Jeeva Nagar, Collectorate (Post)
Dharmapuri - 636 705.

## தலைவர் பக்கம்

நம் இயக்கத்தின் 18-வது மாநில மாநாடு செப்டம்பர் 29-ந் தேதி ஈரோடு நகரில் மிக விமரிசையாக நடைபெற்றது. மூன்று அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதாக உறுதியளித்திருந்தும் சில நிகழ்ச்சிகளின் காரணமாக பங்கு பெறமுடியவில்லை. துணைவேந்தரும் வராவிட்டாலும் நம்முடைய பேராசிரியர்களின் வருகைப்பதிவு எல்லாவற்றையும் ஈடு செய்துவிட்டது. சிறந்த முறையில் மாநாட்டு ஏற்பாடுகளைச்செய்த ஈரோடு கிளைப்பொறுப்பாளர்கள் மற்றும் முன்னின்று பணியாற்றிய அனைவருக்கும் பாராட்டுகள்.

FISE-யின் மாநாடு கொழும்பு நகரில் செப்டம்பர் 14-ந் தேதி நடைபெற்றது. JFME கல்வியைக்காக்கும் நடவடிக்கை கூட்டமைப்பின் சார்பாக டெல்லியில் அக்டோபர் 28-ல் கருத்தரங்கமும் 29ல் மக்கள் பேரணியும் நடைபெறயிருக்கின்றன. இவ்வமைப்பில் நாமும் இருப்பதால் நம் உறுப்பினர்களும் அதிக எண்ணிக்கையில் கலந்து கொள்ள வேண்டும்.

**எனது முகவரி :** 43/3, மஹால் 2வது தெரு,
மதுரை - 625001. கைப்பேசி : 8428254243

தோழமையுடன்
**T.N. கோகுல்நாத்பாபு**

---

## திருவண்ணாமலை கிளை

எமது கிளையின் பொதுக்குழுவானது கிளைத்தலைவர் பேரா. சு. பரந்தாமன் தலைமையுரையுடன் 15.09.2018 சனிக்கிழமை மாலை 5 மணிக்குக் கூடியது. மேனாள் இந்தியகுடியரசின் தலைமை அமைச்சர் வாஜ்பாய் மற்றும் மேனாள் மக்களவைத்தலைவர் சோம்நாத் சாட்டர்ஜி ஆகியோரின் மறைவிற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. செப்டம்பர் மாதம் பிறந்த நாள் கண்ட பேராசிரியர்கள் சு. பரந்தாமன் மற்றும் நா. சுந்தர்ராயப்பன் ஆகியோர்க்கு வாழ்த்துக்களும், பாராட்டுதலும் கரவொலி மூலம் உறுப்பினர்கள் தெரிவித்து மகிழ்ந்தனர். மணநாள் கண்ட உறுப்பினர்களுக்கு நல்லாசிகள் வழங்கப்பட்டன.

அகில இந்திய அமைப்பு, மாநில அமைப்பு மேற்கொண்ட சங்கப் பணிகளின் தொடர்நடவடிக்கைகளையும், திருச்சியில் நடைபெற்ற மாநிலச் செயற்குழுவின் முடிவுகளையும் கிளைச் செயலர் உறுப்பினர்களுக்குத் தொகுத்து வழங்கினார். கிளையின் சங்கப் பணிகளை உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொண்டார். கிளையின் நிதி நிலை குறித்து கிளைப்பொருளாளர் உறுப்பினர்களுக்கு விவரித்தார். உறுப்பினர்களின் கருத்துப்பரிவர்த்தனைக்குப்பின் ஈரோடு மாநாடு செலவிற்கு உறுப்பினர் ஒவ்வொருவரும் ரூ. 300/- கொடுக்க வேண்டுமென பொதுக்குழு முடிவெடுத்தது.

கிளையின் இணைச் செயலரின் நன்றியுரையுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**பேரா. கு. மகாலிங்கம்**
கிளைச்செயலாளர், திருவண்ணாமலைக்கிளை



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



## பொதுச்செயலர் கடிதம்

இனிய பேராசிரியர்க்கு, வணக்கம்

நமது அமைப்பின் 18வது மாநில மாநாட்டிற்கான தயாரிப்புகள் நன்றாக நடைபெற்றுக் கொண்டுள்ளன. ஈரோடு கிளை உறுப்பினர்கள் முழு வீச்சில் செயல்பட்டுக் கொண்டுள்ளனர். மற்ற கிளைகளின் பொறுப்பாளர்களும் மாநாட்டிற்கு உறுப்பினர்களை திரட்டிக் கொண்டு வருவதில் அக்கறையாக செயல்படுவது நம்பிக்கையூட்டுகிறது.

மாநாட்டிற்கான பேச்சாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் எல்லாம் கலந்து கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர். மாநாடு சிறப்பாக நடைபெறும் என நம்புகிறோம். இயக்கத்தின் வளர்ச்சிப் போக்கில் இம்மாநாடு முக்கிய பங்காற்றும், இவ்வமைப்பு பல்வேறு தடைகளைக் கடந்து முன்னேற்றம் கண்டுள்ளது. இனியும் தொடரும்.

கல்வியை காப்போம் என்ற இலக்கோடு இம்மாநாடு நடைபெறுகிறது. நடுவண் அரசு பல்கலைக்கழக நிதியுதவிக் குழுவினைத் கலைத்துவிட்டு ஏற்படுத்தக்கூடிய ஆணையம் உயர்கல்வியின் வளர்ச்சிக்கு உதவாது. அதிகாரிகள் அதிகமாகவும் அரசால் நியமிக்கப்படும் கல்வியாளர்கள் சிலராலும் நிர்வகிக்கக் கூடிய ஆணையம் அரசின் ஊது குழலாகத் தான் இருக்கும். சுதந்திரமாக தன்னாட்சி அமைப்பு கொண்டு செயல்படும் நிறுவனம்தான் உயர்கல்வியின் வளர்ச்சிக்கு உதவும். பல்கலைக்கழகங்களை சுயநிதி அமைப்புகளாக மாற்றுவது கார்ப்பரேட்டுகளுக்கு பல்கலைக்கழகம் நடத்த அமைதி வழங்குவது போன்ற செயல்கள் உயர் கல்வியை வியாபாரப் பாதைக்கு கொண்டு செல்வதாகும். எனவே நமது அகில இந்திய அமைப்பு AIFRUCTO இதனில் AIFUCTO -வுடன் சேர்ந்து போராட்டங்களை டெல்லியில் தொடர்ந்து நடத்திக் கொண்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக புதுதில்லியில் அக்டோபர் 29 தேதிகளில் கருத்தரங்கம் நடத்த முடிவு செய்துள்ளது.

தமிழகத்தில் பள்ளிகள் மூடப்படுவது பெரும் வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. பள்ளி மற்றும் கல்லூரிகளில் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலங் கடந்து கொண்டுள்ளது கல்வித் தரத்தை குறைக்கும் செயலாகும். தமிழக அரசு பணியிடங்களை குறைக்க குழு நியமித்துள்ளது. இவை அனைத்தும் கல்வியை சீரழிக்கும் நடவடிக்கையாகும். எனவே கல்வித் துறையில் வாழ்க்கை முழுவதையும் வளர்ச்சிக்கு செலவிட்டுவிட்டு தற்போது உள்ள நிலைமையில் சீரழிவின்றி காக்க தயாராவோம்.

**எனது முகவரி :** 3/671 முதல் தெரு, ஜீவா நகர்,
கலெக்டரேட் (அஞ்சல்), தருமபுரி - 636705.
தொலைப்பேசி 04342 - 230397 செல் : 9443334397
E.Mail : perumalep@hotmail.com

வாழ்த்துக்களுடன்,
தோழமையுள்ள
**இ.பி. பெருமாள்**
பொதுச்செயலர்

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



## மாநிலப் பொருளர் அறிக்கை

29.9.2018

இனிய பேராசிரியர்களுக்கு, வணக்கம்!

நமது கழக உறுப்பினர்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள். நமது கழகத்தின் கிளைகளிலிருந்து செப்டம்பர் 2018ல் பெறப்பட்ட உறுப்பினர் கட்டணம், செய்திமடல் நிதி, அறக்கட்டளை நிதி, கழக வளர்ச்சி நிதி, கட்டிட நிதி, கேரள வெள்ள நிவாரண நிதி, AIFRUCTO ஆயுள் சந்தா மற்றும் ஆண்டு சந்தா பற்றிய விபரங்கள்.

**தூத்துக்குடி** கிளைச் செயலரிடமிருந்து 2018-19க்கு 4 புதிய உறுப்பினர்களின் கட்டணம் ரூ. 600/-ம், செய்திமடல் நிதியாக ரூ. 800/-ம், AIFRUCTO ஆண்டு சந்தாவாக ரூ. 100/-ம், AIFRUCTO ஆயுள் சந்தா, (Prof.S. ஆல்பர்ட்பால்) ரூ. 1000/-ம், என ஆகமொத்தம் ரூ.2500/- பெறப்பட்டுள்ளது. (புதிய உறுப்பினர்கள் Dr.M. தியாகராஜன், Prof. ராஜேஸ்வரி வைகுண்டம், Dr.M.P. குருசாமி, Dr.P. அல்போன்ஸ் ராஜேந்திரன்)

**திருவண்ணாமலை** கிளைச் செயலரிடமிருந்து 2018-19க்கு AIFRUCTO ஆயுள் சந்தா ரூ. 1000/- (Dr.K. முத்து ராஜனுக்காக) பெறப்பட்டுள்ளது.

சிதம்பரம் கிளைச் செயலரிடமிருந்து 2018-19க்கு ஒரு உறுப்பினர்கட்டணம் ரூ. 150/-ம், AIFRUCTO ஆண்டு சந்தா ஒருவருக்கு ரூ. 25/-ம் கேரள வெள்ள நிவாரண நிதியாக உறுப்பினர்களிடமிருந்து ரூ. 13,600/- என ஆகமொத்தம் ரூ. 13,775/- பெறப்பட்டுள்ளது.

தருமபுரி கிளைச் செயலரிடமிருந்து 2018-19க்கு 27 உறுப்பினர்களின் கட்டணம் ரூ. 4050/- செய்திமடல் நிதியாக ஒரு புதிய உறுப்பினருக்கு (N.K. ஆனந்தன்) ரூ. 200/- என ஆக மொத்தம் ரூ. 4250/- பெறப்பட்டுள்ளது.

திண்டுக்கல் கிளைப் பொருளரிடமிருந்து 2018-19க்கு 17 உறுப்பினர்களின் கட்டணம் ரூ. 2550/- பெறப்பட்டுள்ளது.

திருச்சிகிளைப் பொருளரிடமிருந்து 2018-19க்கு 100 உறுப்பினர்களின் கட்டணம் ரூ. 15000/-ம் AIFRUCTO ஆண்டு சந்தா (Dr.N. செல்லையா) ரூ.25/- என ஆகமொத்தம் ரூ. 15025/- பெறப்பட்டுள்ளது.

கடலூர் கிளைச் செயலரிடமிருந்து 2018-19க்கு 87 உறுப்பினர்களின் கட்டணம் ரூ. 13050/-, AIFRUCTO ஆயுள்சந்தா 12 உறுப்பினர்களுக்கு தலா ரூ. 1000/- வீதம் ரூ. 12000/- என ஆக மொத்தம் ரூ. 25050/- பெறப்பட்டுள்ளது. (M/S S. தமிழாழிக்கொற்கை வேந்தன், R. தாமோதரன், M. ஆறுமுகம், K. ஜெயச்சந்திரன், டி. சகாயதாஸ், கே. மணிக்கொடி, N. குணசேகரன், K. மீனாட்சி, அ. அர்த்தநாரி, S. ஆதிலட்சுமி, Dr.K. மனோகரன், Dr.S. கீதாதேவி)

பழனி கிளைச் செயலரிடமிருந்து 2018-19க்கு 65 உறுப்பினர்களின் கட்டணம் ரூ. 9750/-ம், AIFRUCTO ஆயுள் சந்தா 7 உறுப்பினர்களுக்கு தலா ரூ. 1000/- வீதம் ரூ. 7000/- (Dr.N. ஆறுமுகம், S. ரத்தின சபாபதி, M. செல்லசாமி, N. பாலமுருகன், S. முனியாண்டி, S. வைரவேல், Dr.V. மீனாகுமாரி) செய்திமடல் நிதியாக 2 புதிய உறுப்பினர்களுக்கு ரூ. 400/- என ஆக மொத்தம் ரூ. 17150/- பெறப்பட்டுள்ளது. (Prof. A. வெங்கிடு சாமி, Prof. T. ராஜரத்தினம்)





கோவை - நீலகிரி கிளைப் பொருளரிடமிருந்து 2018-19க்கு 230 உறுப்பினர்களின் கட்டணம் ரூ. 34,500/-ம் செய்திமடல் நிதியாக 57 புதிய உறுப்பினர்களுக்கு ரூ. 11,400/-ம் AIFRUCTO ஆண்டு சந்தா 230 உறுப்பினர்களுக்கு ரூ. 5750/-ம், பேரா. அரங்க நரசிங்கம் அறக்கட்டளை நிதியாக ரூ. 16,500/-ம் AIFRUCTO ஆயுள் சந்தா 83 உறுப்பினர்களுக்கு ரூ. 83000/- என ஆகமொத்தம் ரூ. 151150/- பெறப்பட்டுள்ளது. (புதிய உறுப்பினர்கள் பட்டியல் 1. Balasubramaniam, Prof. N., 2. Balasubramanian, Prof. K.S. 3. Balraj, Prof. K. 4. Dhanalakshmi, Prof. V. 5. Geetha Balakrishnan, Prof. 6. Gopalasamy, Prof. M. Jalantharadoss, Prof. T. 7. Jayanthasri Balakrishnan, Dr.Mrs. 8. Jayaprakash, Dr. N. 9. John Britto, Prof. 10. Krishnan, Prof. V. 11. Kulandaivelu, Dr. C.V. 12. Lakshmi, Prof. R. 13. Malathi, Prof. K.O. 14. Malathy, Dr. N.S. 15. Mangaiarkarasi, Dr. N. 16. Manickam, Prof. P. 17. Maya, Dr. M. 18. Meenakshi, Dr. R. 19. Mohini (FP), Mrs. R. 20. Mrinaline R. David, Prof. 21. Murugesan, 22. Dr. P. Narasimhan, Prof. C.S. 23. Palaniammal (FP), Mrs. K.M. 24. Palaniswamy, Prof. R. 25. Poornima, Dr. S. 26. Radhakrishnan, Prof. R. 27. Rajammal, Prof. Mrs. 28. Rajkumar, Prof. N. 29. Ramachandramurthy, Dr. B. 30. Ramarajan, Dr. M. P. 31. Rameshwari Ramchandra, Dr. 32. Rangasamy, Prof. K. (GAC) 33. Rangaswamy, Prof. K. (NGM) 34. Sabapathy, Prof. S. 35. Sekar, Prof. M. 36. Selva Jayalakshmi (FP), Mrs. P.K. 37. Selvaraj, Prof. K. 38. Shobana Rajakumari, Prof. S. 39. Sreekantan Nair, Prof. B. 40. Srinivasan, Prof. P. 41. Subbarayan, Prof. R. 42. Sugantha Sampathkumar, Prof.Mrs. 43. Sulochana (FP), Mrs. K. 44. Sundaram, Prof. K. Umapathy, Prof. Mrs. V. 45. Velmurugan, Dr. A. 46. Vijaya, Mrs. V. (FP) 47. Dr. N.S. Malathy, 48. Dr. M. Maya, 49. Benjamin Christopher Dr.S., 50. Maruthupandian Dr.P, 51. Kanakaraj, Dr.T. 52. Sankaranarayanan Prof. R. 53. Maragatham Sivasubramanian, 54. சாந்த மேனன், 55. R. திருநாவுக்கரசு, 56. N. ஜெகன்னாதன், 57. Dr.S. வசந்தா, 58.Dr.N. பாலுசாமி)

**AIFRUCTO ஆயுள் சந்தா :** M/S K. சுப்பையன், N. நீலவேணி, K. யுவராஜ், M.K. MARANNAN, S. கனகவேல்ராஜன், N. திருஞான சம்பந்தம், S. அய்யாவு, T. நளினி, V. பார்வதி, ராமநாராயணன், S. அருண்மொழி, M. கிருபாகரன், தேவி பாலகிருஷ்ணன், K.Haldorai, V. சின்னுசாமி, R. தேவி, ராமேஸ்வரி ராமச்சந்திரா, M. நடராஜன், P. சீனிவாசன், C.V. குழந்தைவேலு, K. சுந்தரம், S. சண்முக சுந்தரம், T.S. கிருஷ்ணமூர்த்தி, A. காசிவிஸ்வநாதன், M. நாகமணி, K.M. நாகமணி, S. ஜெயமணி, V. ஜோதிமணி, K. குககுமாரி, மனோன்மணி, G.S. துரை, உஷா சுவாமிநாதன், R. குமரேசன், S.P. மெய்யப்பன், சகுந்தலா சிவகுமார், கமலா கணேசு, S. ஜெயலட்சுமி, கனகம், துரைராஜன், T. ஜோதிமணி, R. சியாமளா தேவி, R. சேகர், K. சரஸ்வதி, M. பத்மாவதி, மிருணாளினி, R. டேவிட், H.R. பொன்னம்மாள், M. ஷேக்முஸ்தபா, K. சுந்தரராமன், D. ராஜதிலகர், B. செல்வராஜ், H. ராமன், B. பர்வதம், K. விஜயராமன், A. சபேசன் கீதாபாலகிருஷ்ணன், S. பூர்ணிமா, சுகந்தா சம்பத்குமார், R. நிவேதிதா தேவி, V. கல்யாண சாமி, T. ஜலந்திரா தாஸ், பத்மா சீனிவாசன், P. முருகேசன், M.P. ராமராஜன், K. சுப்ரமணியம், N. மங்கையர்க்கரசி, Jemima Beryl Mohankumar, T.K. கணபதி, R. சம்பத்து, M.K. நாராயணன், N.S. மாலதி, K. செல்வராஜ், Akhtar Haffez, S. தங்கவேலு, W. Earnest William, S. பட்டாபி, K. சரஸ்வதி, M. ராமசாமி, G. சாத்துரப்பன், S.R. விலாசினி, S. விக்டர் ஆல்பர்ட், T. பாலசுப்பிரமணியன், A. முருகவேல், C. சுப்பிரமணியன், S. வசந்தா.)

**ஈரோடு கிளைப்** பொருளரிடமிருந்து 2017–18க்கு 2 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.300/–ம், 2018–19க்கு 7 உறுப்பினர்கள் மற்றும் 1 புதிய உறுப்பினர் என 8 பேருக்கு ரூ.1200/–ம், செய்தி மடல் நிதியாக 1 புதிய உறுப்பினருக்கு ரூ.200/ –ம் என ஆக மொத்தம் ரூ.1700/– பெறப்பட்டுள்ளது. (Prof. கனகமணி லோகநாதன்)

**வேலூர் கிளைப்** பொருளரிடமிருந்து 2018–19க்கு 5 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.750/–ம், AIFRUCTO ஆண்டு சந்தா 5 உறுப்பினர்களுக்கு ரூ.125/ –ம் AIFRUCTO ஆயுள் சந்தா 3 உறுப்பினர்களுக்கு ரூ.3000/– என ஆக மொத்தம் ரூ.3875/– பெறப்பட்டுள்ளது. (M/s. S. மைதிலி, K. ரேவதி, D. பால்ராஜ்)

**இராமநாதபுரம் கிளைச்** செயலரிடமிருந்து 2018–19க்கு 11 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.1650–ம், AIFRUCTO ஆண்டு சந்தா 11 உறுப்பினர்களுக்கு ரூ.275 என ஆக மொத்தம் ரூ.1925/– பெறப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் கிளைச் செயலரிடமிருந்து 2018–19க்கு 5 புதிய உறுப்பினர்களின் கட்டணம் ரூ.750/–ம், செய்தி மடல் நிதியாக ரூ.1000/–ம், AIFRUCTO ஆண்டு சந்தாவாக ரூ.125/–ம் AIFRUCTO ஆயுள் சந்தாவாக இருவருக்கு ரூ.2000/–ம் (Dr. M.வீராசாமி, Prof. C. வேலாயுதம் பெருமாள்), கேரள வெள்ள நிவாரண நிதி 2வது தவணையாக ரூ.9000/– என ஆக மொத்தம் ரூ.12875/– பெறப்பட்டுள்ளது. (புதிய உறுப்பினர்கள் M/s. Prof. R. Catherine Vimala, Dr. S. Nageswari, Dr. V.A.Ilavazhagan, Dr. N. Rajendran, Prof. D. Premila Kumari)

மதுரை கிளைச் செயலரிடமிருந்து கேரள வெள்ள நிவாரண நிதியாக 49 உறுப்பினர்களிடமிருந்து பட்டியல் படி ரூ.34,700/– பெறப்பட்டுள்ளது.

விருதுநகர் கிளைச் செயலரிடமிருந்து கேரள வெள்ள நிவாரண நிதியாக உறுப்பினர்களிடமிருந்து ரூ.62,600/–ம் 2018–19க்கு 12 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.1800/–ம் என ஆக மொத்தம் ரூ.64,400/– பெறப்பட்டுள்ளது.

கும்பகோணம் கிளைப் பொருளரிடமிருந்து 2018–19க்கு 8 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.1200/–ம், 2 புதிய உறுப்பினரின் செய்தி மடல் நிதி ரூ.400/– என ஆக மொத்தம் ரூ.1600/– பெறப்பட்டுள்ளது. (Prof. G.தமிழரசி, Prof. F.கோதண்டபாணி)

கரூர் கிளைப் பொருளரிடமிருந்து 2018–19க்கு 23 உறுப்பினர்களின் கட்டணம் ரூ. 3450/– செய்தி மடல் நிதியாக 1 புதிய உறுப்பினர் (Prof. C.S.தினகரன்) ரூ.200/–ம் அறக்கட்டளை நிதியாக 2 உறுப்பினர்களின் தொகை ரூ.1000/–ம் (Prof. C.S.தினகரன், R. பழனி), கழக வளர்ச்சி நிதியாக 2 உறுப்பினர்களின் தொகை ரூ.1000/–ம் (Prof. C.S.தினகரன், R. பழனி), AIFRUCTO ஆயுள் சந்தாவாக 15 உறுப்பினர்களுக்கு ரூ.15000/– என ஆக மொத்தம் ரூ.20,700/– பெறப்பட்டுள்ளது. (A.பாலசுப்பிரமணியன், P.பூபதி, Dr. D. பூபதி, G. ஜெகதீசன், S. ஜோசப், M. மாரியப்பன், K. பழனிச்சாமி, P. பாண்டி, M. இராமகிருஷ்ணன், Y. ரங்கநாயகி, S. சுப்பிரமணியன், Y/ தியோடர் ஜெயசீலன், T.செல்வகுமார், N.S.லட்சுமணன், C.S.தினகரன்)

சென்னைக் கிளைப் பொருளரிடமிருந்து 2018–19க்கு 200 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.30000/–ம், செய்தி மடல் நிதியாக 48 புதிய உறுப்பினர்களுக்கு ரூ.9600/–ம் ஆண்டு சந்தா 200 உறுப்பினர்களுக்கு ரூ.5000/– என ஆக மொத்தம் ரூ.44,600/– பெறப்பட்டுள்ளது. (புதிய உறுப்பினர்கள் : M/s. Dr. S.



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



Kannamma, Prof. Radhamma, Dr. A. Sudha, Prof. Varalakshmi, A. Dhanalakshmi, S. Jayalakshmi, Dr. Thangam Seshan, Premakumari, Dr. G. Gowthaman, C.S. Jayasree, Dr. S.P. Indumathi, T. Ratha, V. Varalakshmi, Dr. Marthal Nalini, Thulasi Shanmugam, A. Jwala Jeyaram, Dr. Rani Christhu Dhas, M. Manonmani, Dr. Vasuki, Prof. Meera Balachandran, Dr. A. Suguna, Dr. R. Mumtaz, D.S.Luther, Dr. S.K.M. Maharifa Beevi, S.Padma Malini, Dr. S. Dilshad Begum, Prema Sambath Kumar, M. Jeyammal, V. Sundararajan, Dr. Rosalind Vijaya, Dr. M. Manonmani, Premavathi, Dr. K. Arunachalam, Chandralekha Johnson, Dr. J. Johnson, Dr. M. Jeeva, Nirmala Kanakaraj, Priscilla Jebakumari, Sofee Begam, S. Meenalochani, Dr. S. Sambamurthy, Dr. S. Pichai Pillai, Dr. N. Rajasulochana, Anandhi Jayakumar, Dr. S. Rengarajan, P.S.Chandra, Dr. V. Padmasinisundari, Dr. B. Jothi Bai)

கன்னியாகுமரி கிளைப் பொருளரிடமிருந்து 2017–18க்கு 31 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.4650/–ம், 2018–19க்கு 128 உறுப்பினர்களின் கட்டணம் ரூ. 19,200/–ம், செய்தி மடல் நிதியாக 9 புதிய உறுப்பினர்களிடமிருந்து ரூ.1800/–ம், AIFRUCTO ஆயுள் சந்தாவாக 19 உறுப்பனர்களிடமிருந்து தலா ரூ.1000/–வீதம் ரூ.19000/– எனஆக மொத்தம் ரூ.44,650/– பெறப்பட்டுள்ளது. (புதிய உறுப்பினர்கள் : Dr. C. சுந்தரலிங்கம், Dr. M. சுப்பிரமணிய பிள்ளை, R.செந்தமிழ்ச் செல்வி, சிவசுப்பிரமணியன், ரோஸலின் வில்லியம்ஸ், Dr. சாந்தினி M.தாஸ், M.லட்சுமி நாராயணன், Dr. S. ஜெஸி இசபெல்லா, T. நடராஜன்)

AIFRUCTO ஆயுள் சந்தா : – M/s. E.ஆறுமுகதாஸ், C.செல்லதுரை, M.E.கிறிஸ்டின் பிரமிளா, J. எபனேசர், C.கிருஷ்ணன், B. மரியதாஸன், G. ஆலிவர் ராபர்ட்சன், P. ராமையன், S. ராமசுப்பிரமணியன், V. சத்யநேசன், C. சுந்தரலிங்கம், M.சுப்பிரமணியபிள்ளை, R.செந்தமிழ் செல்வி, சிவசுப்பிரமணியன், ரோஸலின் வில்லியம்ஸ், சாந்தினி M.தாஸ், M.லட்சுமி நாராயணன், S.ஜெஸி இசபெல்லா, T.நடராஜன்)

சிதம்பரம் கிளைச் செயலரிடமிருந்து 2018–19க்கு 2 புதிய உறுப்பினர்களின் கட்டணம் ரூ.300/–ம், செய்திமடல் நிதியாக ரூ.400/–ம் AIFRUCTO ஆண்டு சந்தாவாக ரூ.50/–ம், அரங்க நரசிங்கம் அறக்கட்டளை நிதியாக 2 புதிய உறுப்பினர்களுக்கு தலா ரூ.500/– வீதம், ரூ.1000/– வீதம் கழக வளர்ச்சி நிதியாக 2 புதிய உறுப்பினர்களுக்கு தலா ரூ.500/– வீதம், ரூ.1000/– என ஆக மொத்தம் ரூ. 2750/– பெறப்பட்டுள்ளது. (புதிய உறுப்பினர்கள் : M/s. K. வனிதாமணி, T.சொக்கலிங்கம்)

கிளைப் பொறுப்பாளர்கள் முந்தைய ஆண்டு சந்தா தொகைகளைப் பெற்று அனுப்புமாறும், புதிய உறுப்பினர்களிடமிருநது அறக்கட்டளை நிதி, கழக வளர்ச்சி நிதிகளையும், உறுப்பினர்களிடமிருந்து கட்டிட நிதி, கேரள வெள்ள நிவாரண நிதிகளையும் பெற்று அனுப்புமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

கிளைப் பொறுப்பாளர்கள் தங்களது தொகைகளை அனுப்ப வேண்டிய முகவரி : இந்தியன் வங்கி, திருவானைக்கோவில், திருச்சி **SB A/c No. 935236819, IFSC Code : IDIB000S110**

**எனது முகவரி :** 3/175, G.R.T. நகர்,
திருவாரூர் – 610 001. செல் : 9443976222
E.mail : indirabalu1@gmail.com

அன்புடன்
பேரா. **M. பாலசுப்பிரமணியன்**
மாநிலப்பொருளர்

# தமிழ்நாடு ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர் கழகம்

236/2000

தலைமைக் கழகம் முத்துக்காளத்தி தெரு, திருவல்லிக்கேணி சென்னை – 600 005

பதினெட்டாவது மாநில மாநாடு – குருசாமி கவுண்டர் கல்யாண மண்டபம் ஈரோடு.

**சுற்றறிக்கை 10 / 2018**

தமிழ்நாடு ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர் கழகத்தின் பதினெட்டாவது மாநில மாநாடு பெரியார் பிறந்த மண்ணில் ஈரோடு குருசாமி கவுண்டர் திருமண மண்டபத்தில் எழுச்சியோடு நடைபெற்றது. ஈரோட்டிலுள்ள தமிழ்த்தாய்க் கலைக் குழுவின் வியக்கவைக்கும் நாட்டுப்புற ஆட்டங்களுடன் தொடங்கிற்று. அனைவரையும் கவரும் வண்ணமும் பார்த்த அனைவரும் பாராட்டும் வண்ணமும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பின்னர் இயக்க கொடியை ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் தலைவர் பேரா. என். செந்தாமரை கொடியை ஏற்றிவைத்தார். தமிழ்நாடு ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர் கழகத்தின் முன்னாள் துணைத்தலைவர் பேரா. சீனிலட்சுமணன் வாழ்த்துரை வழங்கினார். செப்டம்பர் 29ம் தேதியின் முக்கியத்துவத்தை விளக்கிப் பேசினார்.

**பொதுக்குழு முதல் அமர்வு :**

இதன் பின்னர் மாநிலப் பொதுக்குழு மாநிலத் தலைவர் முனைவர் டி.என். கோகுல்நாத் பாபு தலைமையில் நடைபெற்றது. மாநிலப் பொதுக்குழு உறுப்பினர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தலைவரது தொடக்கவுரையைத் தொடர்ந்து பொதுச் செயலாளர் இயக்க அறிக்கையை சமர்ப்பித்து விளக்கிப் பேசினார். மாநிலப் பொருளாளர் கடந்த நிதியாண்டின் தணிக்கை செய்யப்பட்ட வரவு செலவு அறிக்கையை விரிவான விளக்கங்களுடன் அவைக்கு அளித்தார். மாநில இணைச் செயலாளர் மாநாட்டிற்கான தீர்மானங்கள் படித்தளித்தார்.

**பொதுக்குழு இரண்டாம் அமர்வு :**

மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு 2.30 மணிக்கு பொதுக்குழு இரண்டாம் அமர்வு மாநிலத் துணைத்தலைவர் முனைவர் என். மாரிசாமி தலைமையில் நடைபெற்றது. இதனில் பொதுக்குழு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை தெரிவித்தனர். மாநாட்டுத் தீர்மானங்களில் கூடுதலாக சேர்க்க வேண்டிய கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இக்கருத்துக்களுக்கு பொதுச் செயலாளர் பதிலளித்தார். பின்னர் பொதுச் செயலாளர் அறிக்கையை ஏகமனதாக ஏற்று ஒப்புதல் தந்தனர். மாநிலப் பொருளாளரது வரவு – செலவு அறிக்கைக்கு ஒப்புதல் வழங்கியது. இணைச் செயலாளர் படித்தளித்த மாநாட்டுத் தீர்மானங்கள் கூடுதலாக சேர்த்துக் கொண்டவற்றுடன் சேர்த்து பொதுக்குழு ஒப்புதல் வழங்கியது.

**மாநாட்டு தொடக்க விழா :**

காலை 10.30 மணிக்கு மாநிலத் தலைவர் முனைவர் டி.என். கோகுல்நாத் பாபு தலைமையில் 18வது மாநில மாநாட்டின் தொடக்கவிழா நடைபெற்றது. தமிழ்த்தாய்



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



வாழ்த்துக்குப்பின் வரவேற்புக் குழு செயலாளர் முனைவர் கோபால்சாமி வரவேற்புரை நிகழ்த்தினார். தலைவர் தலைமையுரையாற்றிய பின் அகில இந்திய ஓய்வுபெற்ற பல்கலைக்கழக மற்றும் கல்லூரி ஆசிரியச் சங்கங்களின் கூட்டமைப்பு செயலாளர் முனைவர் B. பார்த்த சாரதி தொடக்கவுரையாற்றினார். அகில இந்திய அளவில் ஓய்வு பெற்றவர்கட்கான ஓய்வூதியர்கள் – பற்றியும் வழங்காத மாநிலங்கள் பற்றியும் ஓய்வூதியத்தின் முக்கியத்துவம் குறித்தும் பேசினார். இதன் பின் அண்ணாமலைப் பல்கலைக்கழக ஓய்வூதியர் சங்கத் தலைவர் பேரா. பக்கிரிசாமி மாநாட்டு மலரை வெளியிட்டு பேசினார். பாரதியார் பல்கலைக்கழக முன்னாள் பதிவாளர் பேரா. P.N. சிலம்பண்ணன் மாநாட்டு மலரைப் பெற்றுக் கொண்டு பேசினார். பல்கலைக்கழக ஆசிரியர் சங்க முன்னாள் தலைவர் பேரா. என் செந்தாமரை மாநாட்டை வாழ்த்தி பேசினார். மாநாட்டு பொருளாளர் பேரா. B. பிரபாகரன் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டோருக்கு நன்றி கூறினார்.

**நிதி வழங்கலும் 80 வயதை கடந்தவர்க்கு பாராட்டும்**

மதியம் 12.30 மணிக்கு அரங்க. நரசிங்கம் அறக்கட்டளையின் நிதி வழங்கும் நிகழ்ச்சியும் 80 வயதைக் கடந்தவர்களை பாராட்டி பொன்னாடை போர்த்தும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாநிலப் பொருளாளர் பேரா. எம். பாலசுப்ரமணியன் தலைமை தாங்கி நடத்தினார். அறக்கட்டளையின் நிர்வாகக் குழு உறுப்பினர் பேரா. கமல்ராஜ் அனைவரையும் வரவேற்றார். பின்னர் கூட்டத் தலைவரது தலைமையுரைக்குப் பின் அறக்கட்டளையின் நிதி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. கணக்கு கருவூலத்துறை ஆணையர் தென்காசி. சு. ஜவகர் இ.ஆ.ப. மாநிலத்திலுள்ள 10 அமைப்புகட்கு நிதியுதவி வழங்கினார். இதன்பின்னர் 80 வயதைக் கடந்த பேராசிரியர்கட்கு பொன்னாடை போர்த்தி சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. 76 பேரில் மாநாட்டிற்கு வருகை தந்த 11 பேருக்கு கணக்கு கருவூலத்துறை ஆணையர் தென்காசி. சு. ஜவகர் பொன்னாடை போர்த்தி சான்றிதழ் வழங்கினார். பின்னர் வாழ்த்திப் பேசினார். ஓய்வூதியர்கள் பற்றிய பிரச்சினைகட்கு வழங்கும் தீர்வு பற்றியும் ஓய்வூதியர்க்கான மருத்துவ காப்பீட்டு திட்டம் பற்றியும் பேசினார். அரங்க நரசிங்கம் அறக்கட்டளையின் நிர்வாகக் குழு உறுப்பினர் முனைவர் வே. இராமசாமி நன்றி கூறினார்.

**நிறைவு விழா**

மாலை 3.30 மணிக்கு நிறைவு விழா பொதுச் செயலாளர் பேரா. இ.பி பெருமாள் தலைமையில் தொடங்கி நடைபெற்றது. தலைமையுரையில் மாநாட்டின் நோக்கமாகிய கல்வியை காப்போம் என்பதற்கான காரணம் பற்றி விளக்கமளித்தார். கூட்டத்திற்கு வந்தோரை மாநிலத் துணைத்தலைவர் பேரா. பார்வதி கோபாலன் வரவேற்றுப் பேசினார். மாநில மகளிர் ஒருங்கிணைப்பாளர் பேரா. எஸ். சந்திரா சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் பேச்சாளர்கள் பற்றி அறிமுக உரை ஆற்றினார்.

இதன் பின்னர் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் பேரா. சேட்டு வாழ்த்தி பேசிய பின் AIFRUCTO துணைத்தலைவர் முனைவர் இரவி. வாழ்த்திப் பேசினார். இதன்பின்னர் ஓய்வு பெற்ற அலுவலர் சங்கத்தின் மாநிலத்

தலைவர் திரு. ஜி. ரங்கராஜ் நீதி மன்றங்களில் கோரிக்கைகள் வழக்குகளாக கால விரயமாவது பற்றியும் நீதித் துறையில் வழங்கப்படும் தீர்ப்புகள் பற்றியும் விரிவாகப் பேசி மாநாட்டினை முடித்து வைத்தார். மாநாட்டின் தீர்மானங்களை மாநில இணைச் செயலாளர் முனைவர் சிவசண்முகம் விளக்கிப் பேசினார். இறுதியாக மாநிலத் துணைத்தலைவர் முனைவர் ம. இராஜகோபால் நன்றியுரைக்குப்பின் நாட்டுப்பண்ணுடன் மாநாடு நிறைவுற்றது.

இம்மாநாட்டிற்கு 700க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டு மாநாட்டை சிறப்பித்தனர். ஈரோடு பதினெட்டாவது மாநில மாநாடு திருப்பு முனை ஏற்படுத்திய மாநாடு ஆகும். கண்டோர் வியக்கும் வண்ணம் உறுப்பினர் பங்கேற்பு அமைந்தது. ஏற்பாடுகள். சிறப்புற அமைந்திருந்தது. ஈரோடு கிளைக்கு நன்றி

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள

**இ.பி. பெருமாள்**

பொதுச்செயலர்

---

**தமிழ்நாடு ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர் கழகம்**

**பதிவு எண் 236/2000**

**பதினெட்டாவது மாநில மாநாடு 29.9.2018**

**மாநாட்டு தீர்மானங்கள்**

**மத்திய அரசு**

1. பன்முகத் தன்மை கொண்ட நாட்டில் கல்வித் தரத்தை உயர்த்துவது என்ற பெயரால் மருத்துவம் சார்ந்த உயர்கல்வி படிப்புகட்கு தேசிய நுழைவு தகுதித் தேர்வு (NEET) நடுவண் அரசு நடத்துவதை இம்மாநாடு கைவிடக் கோருகிறது. மாநிலக் கல்வி உரிமை, இடஒதுக்கீடு, போன்றவற்றை புறக்கணிக்கும் இந்நடவடிக்கையை கண்டிக்கிறது.
2. உயர்கல்வி வளர்ச்சியில் கல்வித் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துவதிலும் கல்வி வளர்ச்சியை கருத்திற்கொண்டு நிதி வழங்குவதிலும் பெரும்பணி ஆற்றி வந்த பல்கலைக்கழக நிதியுதவிக் குழுவினை (UGC) கலைத்துவிட்டு உயர்கல்வி ஆணையம் அமைக்கும் நடவடிக்கையை நடுவண் அரசு உடனடியாகக் கைவிடவேண்டும். மாநில அரசு இக்கருத்தை வலியுறுத்தியுள்ளதை வரவேற்கிறோம். எனவே பல்கலைக்கழக நிதியுதவிக் குழு தொடர்ந்து செயல்பட அனுமதிக்க இம்மாநாடு வலியுறுத்துகிறது.
3. கல்வியை பரவலாக்கவும், சமச்சீராக அமையவும் அனைவருக்கும் கட்டாயமாக கல்வி தந்திடவும் கல்வியை பொதுப்பட்டியலிருந்து (Concurrent list) மாநில அரசின் அதிகாரப் பட்டியலுக்கு மாற்றி வழங்கிட நடுவண் அரசை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.
4. மத்திய அரசின் பல்கலைக்கழக நிதியுதவிக்குழுவினது ஊதியத் திருத்த அறிக்கையை அனைத்து மாநிலங்களும் முழுமையாக அமுல்படுத்திட நடுவண் அரசு மாநிலங்கட்கு 100% நிதியுதவி அளித்திட இம்மாநாடு வற்புறுத்துகிறது.



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



5. தற்போது நடுவண் அரசின் அறிவிப்பில் உயர்கல்வி நிறுவனங்களை தரப்படுத்துவதாக அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பல்கலைக்கழகங்கள், தன்னாட்சிகல்லூரிகள் போன்றவற்றில் தரம் பிரித்து வேறுபடுத்துவதுடன் நிதியுதவி வழங்குவதிலும் பாரபட்சம் காட்டும் வகையில் உள்ளது. பல்கலைக்கழகங்கள் தன் நிர்வாகத்திற்கான செலவை சுயமாக சம்பாதித்துக்கொள்ளவேண்டும் என கூறப்பட்டுள்ளது. இவையாவும் உயர்கல்வியின் வளர்ச்சிக்கு எதிரானது. எனவே இவற்றை கைவிடவேண்டும் என இம்மாநாடு வற்புறுத்துகிறது.
6. உயர்கல்விக்கான நிதி ஒதுக்கீடு தேசிய வருமானத்தினின்று 6% ஒதுக்க வேண்டும். இது கல்வியாளர் கோத்தாரி அளித்த பரிந்துரையாகும். எனவே இதை அமுல்படுத்த இம்மாநாடு கோருகிறது.
7. உயர்கல்வியில் தனியார் முதலீடு செய்து பல்கலைக்கழகங்கள் தொடங்க அனுமதியளிப்பதாக நடுவண் அரசு அறிவித்துள்ளது. கட்டிடம் இல்லாத போதிய அடிப்படை கட்டமைப்பற்ற நிறுவனத்திற்கு தற்போது அங்கீகாரம் அளித்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது. எனவே இதுபோன்றவற்றால் உயர்கல்வி சீரழியும். ஆகவே உயர்கல்வியில் தனியார் மயமாக்கும் நடவடிக்கையை கைவிடக்கோருகிறது.
8. ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் பணியினின்று ஓய்வு பெற்றபின் வழங்குவது ஊதியமில்லை என்பதால் வருமான வரியினின்று விலக்களிக்க வேண்டுகிறது.
9. சிறந்த சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் மனித உரிமைக் காவலர்கள் ஐதராபாத் வாராவாரா ராவ், பரீதாபாத் சுதா பரத்வாஜ் மும்பை பெர்னல் சான்சுல்லேஸ், சதீஸ்கர் அருண் பெர்ரீரா மற்றும் டெல்லி கவுதம் நவ்லான் ஆகிய 5 பேரையும் தேசவிரோதிகள் என முத்திரையிட்டு கைதுசெய்துள்ளதை கண்டிக்கிறது. கருத்து சுதந்திரத்தை மதித்து அவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.
10. நாட்டின் மக்கள்தொகையில் சரிபாதி பெண்கள் உள்ளதால் அவர்கட்கு அனைத்து நிலைகளிலும் சட்டமன்றம் நாடாளுமன்றம் உட்பட 33% இடஒதுக்கீடு வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறது.
11. மக்களின் தேவைக்கு எல்லாவற்றிலும் பெட்ரோல் டீசல் பயன்படுத்தப்படுகிறது. தற்போது அன்றாடம் விலை உயர்ந்து கொண்டுள்ளது. இவ்விலை உயர்வு மக்களின் எல்லாப் பகுதியினரையும் பாதிக்கும் என்பதால் பெட்ரோல் டீசல் விலையை உடனடியாகக் குறைக்கும்படி வேண்டுகிறது.
12. மத்திய நிதி அமைச்சர் இனிமேல் ஊதியக்குழு இல்லையெனக் கூறியுள்ளார். விலைவாசி உயர்வு, பணமதிப்பு வீழ்ச்சி போன்றவற்றால் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே 10 ஆண்டுகட்கு ஒருமுறை ஊதியக்குழுவை அமைக்கும்படி இம்மாநாடு வேண்டுகிறது.
13. சேலத்திலிருந்து சென்னை செல்ல ஏற்கனவே 3 சாலை வழிகளும் விமான வழியும் உள்ள நிலையில் 10 ஆயிரம் கோடியில் எட்டு வழிச்சாலை

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் சிறு, குறு விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கிறது. எனவே இச்சாலை திட்டத்தை கைவிடக்கோருகிறது.

**மாநில அரசு**

1. அரசுப்பணியில் நீண்ட காலம் பணியாற்றி ஓய்வு பெறுவோருக்கு பயனளிக்காத வகையில் புதிய ஓய்வூதியம் உள்ளது. ஓய்வுபெற்றபின் அமைதியான முறையில் வாழ ஏதுவாக பழைய ஓய்வூதியத் திட்டத்தை 1.4.2003-க்குப் பின் பணி நியமனமானவர்க்கு விரிவுபடுத்திட இம்மாநாடு வேண்டுகிறது.
2. பல்கலைக்கழக நிதியுதவிக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட ஊதியத் திருத்தத்தை தமிழ்நாடு அரசு அரசாணை 145 நாள் 6.7.2008 மூலம் பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளில் பணியாற்றுவோர்க்கு வழங்கியது. அதேசமயம் 2006-லிருந்து 2015 முடிய ஓய்வு பெற்றோர்க்கு திருத்திய ஓய்வூதியம் பெற ஓய்வூதிய அட்டவணை (Concordant Table) வழங்கிடுமாறு தமிழக அரசை கேட்டுக்கொள்கிறது.
3. தமிழ்நாடு எட்டாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தியபோது மத்திய அரசு அமுல்படுத்தியதுபோன்று 1.1.2016 முதல் அமுல்படுத்தாது 21 மாதங்கள் கழித்து மாநில அரசு 1.10.2017 முதல் அமுல்படுத்தியது. எனவே 21 மாதங்கட்கு திருத்திய ஓய்வூதிய நிலுவை பெற ஆணை வழங்குமாறு வேண்டுகிறோம்.
4. 1.1.1986 முதல் 31.12.1989 முடிய உள்ள காலத்தில் பணியாற்றி ஓய்வுபெற்றவர்க்கு இதுவரையில் திருத்திய ஓய்வூதியம் வழங்கப்படாமல் உள்ளது. எல்லோரும் 2006க்கான ஓய்வூதியத்திருத்தம் பெற்றுவிட்ட நிலையில் அவர்கட்கு மட்டும் வழங்கப்படாமல் உள்ளதை கண்டிக்கிறோம்! எனவே உதவிப்பேராசிரியராக 19 ஆண்டுகள் இருந்து இடைப்பட்ட காலத்தில் ஓய்வு பெற்றிருந்தால் அல்லது உதவிப்பேராசியர் பணியுடன் தேர்நிலைப் பணிக்காலத்தையும் கணக்கிலெடுக்க இம்மாநாடு வேண்டுகிறது.

   5. பட்டதாரி பயிற்றுநர்/விளக்குநராக பணியாற்றி ஓய்வுபெற்றவர்க்கு UGC-யின் தற்போதைய ஊதியத் திருத்தத்தில் இடம்பெறவில்லை. மாநில அரசின் ஊதியத் திருத்தம் மற்றும் பல்கலைக்கழக நிதியுதவிக் குழுவின் ஊதியத் திருத்தம் ஆகியனவற்றில் இடம்பெறாததால் அவர்கட்கு திருத்திய ஊதியம் நிர்ணயித்து ஓய்வூதியம் வழங்கிட தமிழ்நாடு அரசைக் கேட்டுக்கொள்கிறது.
6. 2008-09-ஆம் கல்வியாண்டில் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், அரசால் மீளப் பணியமர்த்தப்பட்டு அரசு கல்லூரிகளில் பணியாற்றினர். அவ்வாறு பணியாற்றிய ஓய்வுபெற்ற ஆசிரியர்கட்கு பணியாற்றிய காலத்திற்கான திருத்தியமைக்கப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில் நிலுவை வழங்காமல் நீண்டகாலம் நிலுவையிலுள்ள இதனை உடனடியாக ஊதிய நிலுவை வழங்க வேண்டுகிறது.





7. அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் 1995ம் ஆண்டு ஜுன் மாதம் முதல் 1995 டிசம்பர் முடிய பணியாற்றி ஓய்வு பெற்றவர்கட்கு 1996 மே மாதம் 31ம் தேதி பணியில் தொடர்ந்து பணியாற்றிட அரசு ஆணை வழங்கியது. அவர்கள் பணியாற்றி 1996 மே 31அன்று பணியின்று ஓய்வு பெற்றனர். அவ்வாறு அவர்கள் பணியாற்றி காலத்தில் 1.1.1996 முதல் பல்கலைக்கழக நிதியுதவிக்குழுவின் திருத்திய ஊதிய ஆணைகள் அமுலாக்கப்பட்டது. ஆனால் பணி நீட்டிப்பில் இருந்தோர்க்கு ஊதியத்திருத்தம் வழங்கப்படவில்லை. எனவே அவர்கட்கு புதிய ஊதியத்திருத்தம் வழங்கி ஓய்வூதியம் மாற்றியமைக்க வேண்டுகிறோம்.
8. 2005 ஜுன் முதல் 2005 டிசம்பர் முடிய பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் 2006 மே 31 வரை பணிநீட்டிப்பு வழங்கப்பட்டது. திருத்திய ஊதிய விகிதம் 1.1.2006 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. எனவே 31 மே 2006 முடிய மீளப் பணியிலிருந்தோருக்கும் ஊதியத்திருத்தம் வழங்கி ஓய்வூதியம் திருத்தி வழங்கிட வேண்டுகிறோம்.
9. பட்டதாரி பயிற்றுநர்/விளக்குநர் ஆகப் பணியாற்றி உதவிப்பேராசிரியராக பதவி உயர்வு பெற்றோர் பட்டதாரி பயிற்றுநர்/விளக்குநரை விட குறைவான ஓய்வூதியம் பெற்றதை மாற்றியமைத்து நியாயம் வழங்கவேண்டுகிறோம்.
10. கல்லூரிகளில் 1986-ம் ஆண்டிலிருந்து பணிபுரியும் ஆசிரியர்களுக்கு உயர்கல்வித்துறை அரசாணை 111-ன்படி Ph.D., / M.Phil., தகுதியுடைய ஆசிரியர்களுக்கு முறையே 9/10/11 ஆண்டுகளில் தேர்வுநிலை பணி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் 1.1.1986-க்கு முன் பணியில் சேர்ந்த அனைவருக்கும் Ph.D., / M.Phil., தகுதியுள்ளோருக்கு முறையே 13/15/16 ஆண்டுகளில்தான் தேர்வுநிலை வழங்கப்பட்டது. இம்முரண்பாட்டை நீக்க 1.1.1986-க்கு முன் பணியில் சேர்ந்த அனைவருக்கும் முறையே 9/10/11 ஆண்டுகளில் தேர்வுநிலை வழங்கவேண்டும் என்று தமிழக அரசை இம்மாநாடு வேண்டுகிறது.
11. ஈரோட்டிலுள்ள சிக்கைய நாயக்கர் கல்லூரியை தமிழ்நாடு அரசு கோவையிலுள்ள மண்டல இணை இயக்குநர் வழியாக நிர்வகித்து வருகிறது. இதற்கு உரிமையாளர் யாரும் இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளதால் தமிழ்நாடு அரசு நேரடியாக நிர்வாகம் நடத்திட அரசு கல்லூரியாக அறிவித்திட இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.
12. ஓய்வுபெற்றவர்கட்கு அடிக்கடி உடல்நலக்குறைவு ஏற்படுவதாலும் முதிர்ந்த வயதின் காரணமாகவும் நோய்கள் வருவதாலும் மருத்துவ செலவிற்கு ரூ.1000 ஆக மருத்துவப்படியை உயர்த்தி வழங்க வேண்டுகிறது. மருந்துகள் விலைகள் அதிகரித்துள்ளதாலும் மருத்துவரின் கட்டணம் மிகவும் அதிகரித்துள்ளதாலும் மருத்துவ செலவிற்கு உயர்த்தி வழங்கிட இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.
13. மருத்துவ காப்பீட்டு திட்டத்தினால் பயன்பெற முடியாத நிலையில் மருத்துவ காப்பீட்டுத் தொகையை ரூ.150ஆக குறைத்திட இம்மாநாடு வேண்டுகிறது.

14. ஓய்வு பெற்றவர்கள் பயணம் செய்ய இலவச பஸ் பாஸ் வழங்க இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

15. ஓய்வுபெறும்போது வழங்கப்படும் கம்யூடேசனுக்கு 15 வருடங்கட்கு மாதந்தோறும் பிடித்தம் செய்யப்படுகிறது. இவ்வாறு பிடித்தம் செய்யப்படும் தொகை வழங்கிய தொகையை விட அதிகமாக உள்ளதால் 15 ஆண்டுகட்கு பதிலாக 12 ஆண்டுகள் மட்டும் பிடித்தம் செய்ய ஆணை வழங்கிட தமிழக அரசை கேட்டுக்கொள்கிறது.

16. கல்லூரிக்கல்விப் பணியில் இளையோா், பணியில் மூத்தோரைக் காட்டிலும் கூடுதல் ஊதியம் பெற்றுவந்தால் இளைவரின் ஊதியத்தோடு இணையான ஊதியம் வழங்கிடவேண்டுமென்று கூறப்பட்ட நிலையில் செப்டம்பர் 2015ல் தற்காலிகமாக மறுஅறிவிப்பு வரை நிறுத்தி வைக்கப்பட்டது. தற்போது தெளிவான ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 27.7.1998 முன்பு முதுகலை விரிவுரையாளர்கள் பணிநிறைவை அடைந்த அனைவருக்கும் பணியில் சேர்ந்த நாளிலிருந்து மொத்தப் பணிக்காலத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பணி மேம்பாடு வழங்கலாம் என கூறப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டுதலின்படி பணிமேம்பாடு பயனடையாதவர்களுக்கு பணிப்பயனும், பணப்பயனும் வழங்கவேண்டுமென கேட்டுக்கொள்கிறது.

17. 1986க்குமுன் ஓய்வு பெற்றவர்க்கு அரசாணை 106-ன்படி ஓய்வூதியத் திருத்தம் நடைபெற்றது. ஆனால் மற்ற அனைத்து பிரிவினருக்கும் ஓய்வூதியத் திருத்தம் செய்து 1.1.2007 முதல் நிலுவை வழங்கியதைப் போன்று அவர்கட்கு வழங்காமல் 15.4.2016 முதல் நிலுவை வழங்கப்பட்டுள்ளது. எனவே மற்ற எல்லோருக்கும் வழங்கியதைப் போன்று 1.1.2007 முதல் நிலுவை வழங்க வேண்டுகிறோம்.

18. இவ்வாண்டு கா்நாடகம், கேரளா மாநிலங்களில் பெய்த தொடர் மழையால் காவிரியாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து மேட்டூர் அணை நிரம்பி மேலும் அதிகமான நீா் திறந்துவிடப்பட்டது. ஆனால் காவிரியின் பாய்ச்சல் உள்ள கடைமடை பகுதிகட்கு தண்ணீா் சரியாக செல்லவில்லை. எனவே இதுபோன்ற நிலையில் சரியாக நீா்பராமரிப்பு இருக்க கால்வாய்கள் முழுமையாக தூா்வாரப்படல் வேண்டும். அதேபோன்று மிகுதியாக நீரைத்தேக்க தடுப்பணைகள் கட்டப்படவேண்டும் என தமிழக அரசை கேட்டுக்கொள்கிறது.

19. தமிழகத்திலுள்ள இளைய தலைமுறையினரும் மற்றவர்களும் அதிகமாக குடிபோதையால் இறந்து போகின்றனர். குடும்பங்கள் வறுமைக்கு உள்ளாகின்றனர். எனவே தீயப்பழக்கத்திற்கு மக்களை இட்டுச்செல்லும் அரசின் மதுபானக் கடைகளை உடனடியாக மூடவேண்டுமென தமிழக அரசை கேட்டுக்கொள்கிறது.

20. தற்போது இந்தியாவில் பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்து வருகின்றன. இதனால் பெண் குழந்தைகள் பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாகின்றனர். இவற்றைத் தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென மத்திய, மாநில அரசுகளை கேட்டுக்கொள்கிறது.



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



21. அரசு கல்லூரிகளில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்பி மாணவா்க்குத் தரமான கல்வியை வழங்கிட தற்போது கௌரவ விரிவுரையாளா்களாக பணியாற்றும் அனைவரையும் நிரந்தரமாக்கிட வேண்டுமென இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது. அதேபோன்று கணினி கற்பிக்கும் மையத்தில் (CLP) உள்ள தற்காலிக அடிப்படையில் பணியாற்றும் ஆசிரியா்களையும் நிரந்தரமாக்கிட இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

22. தமிழகத்தின் தொன்மையான நாகரீகத்தையும் பொருள்வளத்தையும் பறைசாற்றிக் கொண்டிருக்கும் கொடுமணல் அகழ்வாய்வை விரைந்து முடித்து நொய்யல் கரை நாகரிகம் என்று அறிவிக்க வேண்டுமென மத்திய, மாநில அரசுகளை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

23. இந்திய அரசு, ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியா்களின் நலத்துறை எண் 38/37/08-P&PW(A), நாள்.6.4.2016இன்படி 1.1.2006க்கு முன் ஓய்வுபெற்ற ஆசிரியா்களின் ஓய்வூதியரின் பணிக்காலம் 33 ஆண்டுகளுக்கு, எவ்வளவு காலம் குறைவாக இருப்பினும், முழு ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவா் எனவும், பணிக்கால வருட விகிதாச்சாரப்படி ஓய்வூதியம் குறைக்கக்கூடாது எனவும், 1.1.2006 முதல் பணப்பயன் பெறவும் தகுதி பெற்றவா் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது. இதைப்போலவே தமிழக அரசு ஓய்வூதியா்களுக்கு பயன்படும் வகையில் உரிய ஆணை பிறப்பிக்க தமிழக அரசை இம்மாநாடு கேட்டுக்கொள்வதென தீா்மானிக்கப்படுகிறது.

24. 1.1.2016க்கு முன் பணி ஓய்வுப்பெற்ற ஆசிரியா்கள், 19 ஆண்டுகள் பணி முடித்து, மேலும் மூன்று ஆண்டுகள் இணைப் பேராசிரியராகப் பணி முடித்த நிலையில் அவா்களது மொத்தப் பணிக்காலமான 22 ஆண்டுகளை கணக்கில் எடுத்து, மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை, பல்கலைக்கழக மானியக்குழுவிற்கு பரிந்துரைத்த A.G.P. 10000; Academic Level 14 ன்படி, பேராசிரியருக்கான ஊதியம் ரூ.144200ஐ நிர்ணயம் செய்து, அதன் பாதியளவு ரூ.72100ஐ ஓய்வூதியமாக வழங்க மாநிலத் தலைமை உரிய முயற்சி மேற்கொள்ள வேண்டுமென தீா்மானிக்கப்பட்டது.

25. மத்திய 6ஆவது ஊதியக்குழு பரிந்துரையின்படி மனிதவள மேம்பாட்டுத்துறை வெளியிட்டுள்ள ஆணையின்படி UG, PG கல்லூரி முதல்வா்கள் என்ற வேறுபாடு இன்றி Pay Band ரூ. 37400-67000 – AGP -10000 பெறுவதற்கு மாறாக, மத்திய 7ஆவது ஊதியக்குழு பரிந்துரைத்து, வெளியிடப்பட்டுள்ள ஆணைப்படி U.G. கல்லூரி முதல்வா்களை இணைப்பேராசிரியா் (Associate Professor) ஆக கருதி AGP ரூ.9000க்குரிய Academic Level 13A-ன்படி ரூ.131400 என நிர்ணயம் செய்யும் முரண்பாட்டினை நீக்கி, P.G. கல்லூரி முதல்வா்களுக்கு வழங்கும் Academic Level 14 ன்படி ஊதியம் நிர்ணயம் செய்து, அவ்வூதியத்தில் பாதியளவான ரூ.72100ஐ ஓய்வூதியமாக பெற மாநிலத் தலைமை உரிய முயற்சி மேற்கொள்வதென தீா்மானிக்கப்பட்டது.

**இ.பி. பெருமாள்**
பொதுச்செயலா்

Government of Tamil Nadu
2018

MANUSCRIPT SERIES

**FINANCE [Pension] DEPARTMENT**
**G.O.Ms.No.316, Dated 19th September 2018.**
*(Vilambi, Purattasi-3, Thiruvalluvar Aandu 2049)*

**ABSTRACT**

PENSION - Dearness Allowance to the Pensioners and Family Pensioners - Revised rate admissible from 1st July 2018 - Orders - Issued.

Read the following:-

1. G.O.Ms.No.126, Finance (Pension) Department, dated: 11-04-2018.
2. From the Government of India, Ministry of Personnel, Public Grievances and Pensions, Department of Pension and Pensioners' Welfare, New Delhi Office Memorandum No.42/06/2018-P&PW (G), dated 18-09-2018..
3. G.O.Ms.No.313, Finance (Allowances) Department, dated:18-04-2018.

-oOo-

**ORDER :**

In the Government Order first read above, orders were issued sanctioning the revised rates of Dearness Allowance to the State Government Pensioners / Family Pensioners as detailed below:-

| **Date from which payable** | **Rate of Dearness Allowance** [per month] |
|---|---|
| **[1]** | **[2]** |
| 1-1-2018 | 7 per cent of Basic Pension / Family Pension |

2. Government of India, in its Office Memorandum second read above has enhanced the Dearness Allowance payable to its Pensioners / Family Pensioners from the existing rate of 7% to 9% with effect from 1st July 2018.
3. In the Government order third read above, orders were issued revising the Dearness Allowance payable to State Government employees and teachers from the existing rate of 7% to 9% with effect from 1st July 2018, following the Government of India's decision on enhancing the Dearness Allowance to its employees.
4. Following the orders issued by the Government of India, the Government sanction the revised rate of Dearness Allowance to the State Government Pensioners / Family Pensioners as indicated below:

| **Date from which payable** | **Rate of Dearness Allowance** [per month] |
|---|---|
| **[1]** | **[2]** |
| **1-7-2018** | **9 per cent** of Basic Pension / Family Pension |

5. The additional installment of Dearness Allowance payable under these orders shall be paid in cash with effect from 1-7-2018.



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



6. The arrears of Dearness Allowance for the months of July and August, 2018 shall be drawn and paid by existing cashless mode of Electronic Clearance System (ECS). While working out the revised Dearness Allowance, fraction of a rupee shall be rounded off to next higher rupee if such fraction is 50 paise and above and shall be ignored if it is less than 50 paise.
7. It will be the responsibility of the Pension Disbursing Authority including Public Sector Banks to calculate the quantum of Dearness Allowance payable in each individual case.
8. Pending formal authorisation by the Principal Accountant General, the revised Dearness Allowance shall be paid straightaway by the Pension Pay Officer, Chennai-35, Treasury Officers and Public Sector Banks concerned.
9. This order will apply to the following categories of pensioners:-

(i) Government Pensioners, Teacher Pensioners of aided and local body educational institutions and other pensioners of local bodies.

(ii) The State Government employees who had drawn lumpsum payment on absorption in Public Sector Undertaking / Autonomous Body / Local Body / Co-operative institution and have become entitled to restoration of comuted portion of pension as well as revision of the restored amount.

(iii) Present and future family pensioners; In the case of divisible family pensioners, Dearness Allowance shall be divided proportionately.

(iv) Former Travancore-Cochin State pensioners drawing their pension on 1st November, 1956 in the Treasuries situated in the areas transferred to Tamil Nadu State on that date, i.e. Kanniyakumari District and Shencottah Taluk of Tirunelveli District.

(v) Pensioners who are in receipt of special pensions under Extra-ordinary Pension Rules, Tamil Nadu and Compassionate Allowance.

10. The expenditure on Dearness Allowance payable to the Pensioners and Family Pensioners shall be debited to the respective following Heads of Account:

"2071. Pension and Other Retirement Benefits - 01. Civil - 101. Superannuation and Retirement Allowances - State's Expenditure - AC. Dearness Allowance to Pensioners - 03. Dearness Allowance (D.P.C. 2071 01 101 AC 0306)"

"2071. Pension and Other Retirement Benefits - 01. Civil - 105. Family Pensions - State's Expenditure - AC. Dearness Allowance to Family Pensioners of Tamil Nadu Government - 03. Dearness Allowance (D.P.C. 2071 01 105 AC 0308)".

11. The orders regarding sanction of Dearness Allowance to the widows and children of the deceased Contributory Provident Fund / Non Pensionable Establishment beneficiaries of State Government and the former District Boards who are drawing ex-gratia will be issued separately.
12. The increased expenditure due to the sanction of Dearness Allowance in this order is allocable among the successor States as per the provisions laid down under the State Reorganization Act, 1956.

(BY ORDER OF THE GOVERNOR)

**K.SHANMUGAM**
ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT

## TREASURIES AND ACCOUNTS DEPARTMENT

From

Principal secretary and
commissioner of
Treasuries and Accounts,
Integrated Office Complex for Finance department,
Veterinary Hospital campus, Nandanam,
Anna salai
Chennai- 600m 035.

To

All treasury officers,
The Pension Pay officers, Chennai

Rc.No.0631/2018/E2 Dt. 12.09.2018

Sir,

| | |
|---|---|
| SUB | Higher Education - Revision of Pay scales and allowances/ Pensions etc.,- to the teachers/ lecturers/ Professors in Universities, Govt./ Govt. Aided Colleges governed by UGC -- instruction – Reg. |
| REF | 1. This office letter of No. 0631/2018/E2 dated 20.08.2018,<br>2. Letter from T.N Retired college Teachers Associated dated:28.08.2018 |

Kind attention is invited to the references cited.

In the reference 1st cited copy of the G.O. (MS). No. 145 Higher Education (H1) Department dated: 06.07.18 was communicated to all Treasury Officers/ Pension Pay Officers, Chennai for necessary action at your end.

It is ascertained that some of the Treasury Officers have not revised the pension for the retired college Lecturers and Professors as per G.O.

Therefore, all the Treasury Officers / Pension pay Officer, Chennai are requested to revise the pension as ordered in the G.O. cited.

**M.PUVIYARASU**

Personal Assistant (Treasury control) to
Commissioner of Treasuries and Accounts
For Principal Secretary/ Commissioner
of Treasuries and Accounts.

**Copy To:**

T.N Retired College Teachers Association,
No-3/671, 1st Street, Jeeva Nagar,
Old Quarters, Collector Office Post,
Dharmapuri - 636705.



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



## கிளைச்செய்திகள்

### மதுரை கிளை

11.9.2018 அன்று மூட்டா அலுவலகம், பேரா. V. சண்முக சுந்தரம் அரங்கில் நடைபெற்ற மாதாந்திரப் பொதுக்குழுக் கூட்டத்திற்கு, மூத்த உறுப்பினர் முனைவர் V. சிவனுப் பாண்டியன் தலைமை தாங்கி, அனைவரையும் வரவேற்றார். மதுரைகிளையின் முன்னாள் செயலாளர் மற்றும் இயக்கத்தின் முன்னோடியுமான பேரா. A.K. ராஜகோபால் அவர்களின் திடீர் மறைவிற்கும், முன்னாள் பிரதமர் A.B. வாஜ்பாயின் மறைவிற்கும் அஞ்சலி செலுத்தும் பொருட்டு, உறுப்பினர்களின் 2 நிமிடம் அமைதி காக்க, தலைவர் கேட்டுக் கொண்டார். உறுப்பினர்கள் 2 நிமிடம் எழுந்து நின்று அமைதி காத்து அஞ்சலி செலுத்தினர். இந்த மாதக் கூட்டத்தில் மொத்தம் 80 பேர் கலந்து கொண்டனர்.

பிறந்த நாள் கொண்டாடும் பேராசிரியர்களின் பெயர்களை, இணைச் செயலாளர் பேரா. S. சேதுராக்காயி வாசிக்க, அவர்களுக்கு, உறுப்பினர்கள் வாழ்த்துக் கூறி மகிழ்ந்தனர். அவர்கள் (6பேர்) கைத்தறி ஆடை அணிவித்து மரியாதை செய்யப்பட்டனர். புதிய உறுப்பினர்கள் பேராசிரியர்கள் S. பழனிச்சாமி, R.A. ராஜசேகரன், A. ராஜராஜேஸ்வரி, தங்களை அறிமுகம் செய்து, இப்பேரியக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

செயலாளர் பேரா. G. ராமமூர்த்தி, கடந்தமாத செயல்பாடுகளை விளக்கினார். புதிய ஓய்வூதியத்தை உறுப்பினர்களுக்கு அமல்படுத்தும் பொருட்டு, மாவட்ட கருவூல அதிகாரியையும், கல்லூரிக் கல்வி உதவி இயக்குநரையும் சந்தித்தது பற்றியும் செயலாளர் எடுத்துரைத்தார். தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின், கூட்டு இயக்கத்தில் நம்கிளையும் பங்கு பெற்றது பற்றியும், மாவட்ட ஓய்வூதியர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு நடத்திய ஆர்ப்பாட்டத்தில் நம் இயக்கம் கலந்து கொண்டது பற்றியும் கூறப்பட்டது. ஈரோட்டில் நடைபெறும் மாநில மாநாட்டில் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டு நமது ஒற்றுமையை நிலைநாட்ட, செயலாளர் கேட்டுக் கொண்டார். மலருக்கு விளம்பரங்கள், கட்டுரைகளையும் விரைவாக அனுப்பக் கேட்டுக் கொள்ளப்பட்டது. திருச்சியில் நடைபெற்ற மாநில செயற்குழுக் கூட்ட நடவடிக்கைகளும், உறுப்பினர்கள் விளக்கப்பட்டது. கடந்த 26.3.2018 – அன்று மாநில அளவில் நடைபெற்ற மகளிர் மாநில மாநாட்டு வரவு – செலவு அறிக்கை செயற்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த மாநாட்டின் செலவுபோக மீதமுள்ள ரூ.16,668/– (ரூபாய் பதினாறாயிரத்து, அறுநூற்று அறுபத்து எட்டு)–ஐ தலைமையும், மதுரைக்கிளையும், சமமாகப் பிரித்துக் கொள்வதென, இந்தப் பொதுக்குழு முடிவு செய்கிறது.

மாநில செயற்குழுக் கூட்டத்தின் போது, நமது கிளை சார்பாக, 9 பக்கங்களுக்கான விளம்பரமும், ரூ. 18000/– (பதினெட்டாயிரம்), செயலாளர் பேரா. G. ராமமூர்த்தி மாநாட்டு மலருக்கு எழுதிய “Human Rights” – பற்றிய கட்டுரையும், பொறுப்பாளர்களிடம் அளிக்கப்பட்டது பற்றியும், கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

கேரள வெள்ள நிவாரணத்திற்கு, செயலாளர் தொலைபேசி மூலம் உறுப்பினர்களை தொடர்பு கொண்டு, நிதி அளிக்க கோரியமைக்கு, பெரும் ஆதரவு அளித்த உறுப்பினர்களுக்கு, செயலாளர் நன்றி தெரிவித்துக் கொண்டார். இதுவரை, உறுப்பினர்கள் செலுத்திய வெள்ள நிவாரணத் தொகையை ரூ. 34,700/- (ரூபாய் முப்பத்து நான்கு ஆயிரத்து எழுநூறு) மட்டும், இரண்டாம் தவணையாக செலுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. புதிய ஓய்வூதியம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் உறுப்பினர்களுக்கு வினியோகிக்கப்பட்டது. இந்தப்படிவம் 55 பிரதிகள் எடுத்துக் கொடுத்து உதவிய பேரா. M. கிருஷ்ணன் (SVN College) அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. இரு மாதங்களுக்கு ஆன மதிய உணவு வரவு – செலவு கணக்கை செயலாளர் சமர்ப்பித்தார்.

80 வயது பூர்த்தியடைந்த, கீழ்க்கண்ட பேராசிரியர்களின் பெயர்களை மாநாட்டு விழாவிற்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டது.

1. பேரா. C. தேவராஜன் ; 2. பேரா. M. கிருஷ்ணா

3. பேரா. G. ராமகிருஷ்ணன் ; 4. பேரா. S. சுவாமிநாதன்

பேரா. நரசிங்கம் அறக்கட்டளை மூலம், இந்த ஆண்டு நிதி உதவி பெற, தூய்மை விழிகள் – என்னும் தொண்டு நிறுவனத்தை சிபாரிசு செய்து அனுப்புவதென முடிவு செய்யப்பட்டது.

TANRECTA செய்திகளை, பேரா. T.N. கோகுல்நாத் பாபு, உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்தார். UGC ஊதிய திருத்த அடிப்படையில், புதிய ஓய்வூதியத்தை பழைய உறுப்பினர்களுக்கு DCE மற்றும் ஓய்வூதிய இயக்குநர் அறிவுறுத்தலின்படி,, பெறுவதற்கு முயற்சி மேற்கொள்வதென்ற முடிவில் இருப்பதாகத் தெரிவித்தார். வயது முதிர்ந்த நிலையில், ஓய்வூதியர்கள், கல்லூரிக்குச் சென்று அலைவதில் உள்ள சிரமங்களை எடுத்துரைத்து, AIFRUCTO அமைப்பின் மூலம் இதற்கான வழி காணப்படும் என AIFRUCTO பொதுச் செயலாளர் முனைவர் B. பார்த்தசாரதி தெரிவித்தார். ஆசிரியர் தினத்தைக் கொண்டாடி, வாழ்த்துக்களை கூறிக்கொள்ளும் நாம், நம்மில் ஒரு பகுதியினர், குறைந்த ஊதியத்துடன், எவ்வித சலுகையும் பெறாமல், பணியாற்றுவதும், கிராமப்புற மாணவர்களுக்கு சிறந்த கல்வி கிடைக்காமல், இருக்கும் நிலை கண்டிக்கத் தக்கதாகும். நம்முடைய சமூகக் கடமையாக, இது குறித்து நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் நிறைய உள்ளது என்றும் ஆதங்கத்துடன் கூறினார்.

இலக்கிய ஆர்வலர் மற்றும் கவிஞர் இலட்சிய சிதம்பரம், **ஒருமைப்பாடு** பற்றி, சிறப்புரை ஆற்றினார். பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காக்க ஒருமைப்பாடு அவசியம் என்றார். உறுப்பினர்களின் கலந்துரையாடலுக்குப்பின், கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. மதுரைக் கிளையின் முன்னோடியாக விளங்கிய முன்னாள் கிளைச் செயலாளர் பேரா. A.K. ராஜகோபாலின் திடீர் மரணம், கிளைக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு, என இரங்கல் தீர்மானம் நிறைவேறியது.



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



2. ஓய்வு பெற்ற கல்லூரிப் பேராசிரியர்களின், புதிய ஓய்வூதியத்தை, கல்லூரிக் கல்வி இயக்குநரும், ஓய்வூதிய இயக்குநரும், சென்ற ஓய்வூதிய குழுவின் நடவடிக்கைபோல், இப்போதும் புதிய ஓய்வூதியம் நிர்ணயம் செய்வதன் மூலம் வயது முதிர்ந்த நிலையில், தான் பணியாற்றிய கல்லூரிக்கும் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்திற்கும் பேராசிரியர்கள் அலைவதைத் தவிர்க்க வேண்டும்.
3. வரும் செப்.29 – அன்று நடைபெற விருக்கும் தமிழ்நாடு ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர் கழக மாநில மாநாடு வெற்றி பெற, மதுரை கிளை தெரிவித்துக் கொள்கிறது.
4. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கேரள மக்கள், புதுப்பொலிவு பெற்று, மீண்டும் தத்தம் பணிகளில் ஈடுபட தனது வாழ்த்துக்களை, மதுரைக்கிளை தெரிவித்துக் கொள்கிறது. (செயற்குழு உறுப்பினர் முனைவர் கோமதி நன்றி கூறினார்.)

பொருளாளர் முனைவர் A. மனோகரன், சென்ற மாத வரவு – செலவு கணக்கைச் சமர்ப்பித்ததுடன், 2017–18 – ஆண்டு தணிக்கை செய்யப்பட்ட வரவு – செலவு கணக்கை பொதுக்குழுவில் வைத்து ஒப்புதல் பெற்றார்.

**அடுத்த மாதக் கூட்டம் : நாள் 9.10.2018 செவ்வாய் காலை 10.30 மணி, இடம் பேரா. சண்முக சுந்தரம் அரங்கு, மூட்டா அலுவலகம்.**

நிதி பரிவர்த்தனைகளை, வங்கி மூலம் மேற்கொள்ள : இந்தியன் ஓவர்சீஸ் வங்கி – மதுரை மெயின் கிளை. கணக்கு எண் : SE : 04901000034557: IFSC - IOBA000004 பெயர் : Tamilnadu Retired College Teachers Association, Madurai Unit. வங்கிப் பண பரிமாற்றம் செய்பவர்கள் உடனடியாக பொருளாளருக்கு, அலைபேசி எண் : 94431 81155–இல் குறுந்தகவல் தெரிவிக்க வேண்டும் புதிய உறுப்பினர் கட்டண விவரம் : TANRECTA ஆண்டு சந்தா – ரூ. 400/– ரூ. TANRECTA Speaks : 200/– AIFRUCTO ஆயுள் சந்தா ரூ. 1000/– TANRECTA நன்கொடை ரூ. 500/– அரங்க நரசிங்கம் அறக்கட்டளை நன்கொடை ரூ. 500/– மொத்தம் ரூ. 2600/–

**பேரா. G. ராமமூர்த்தி**
கிளைச்செயலாளர், மதுரைக் கிளை

## புதுக்கோட்டைக்கிளை

புதுக்கோட்டை கிளை பொதுக்குழு 9.9.2018 ஞாயிறு காலை 11.00 மணியளவில் கிளைத்தலைவர் பேரா. எம். ஸ்ரீகுமார் தலைமையில் கூடியது. பொருளாளர் எஸ். விஸ்வநாதன் அனைவரையும் வரவேற்றார்.

இம்மாதம் பிறந்த நாள் காணும் பேராசிரியர்கள் எஸ். நாச்சியப்பன், E.J. ஜான் ஜெயக்குமார், மெ. சண்முகம், டி.கே. மாரிமுத்து, முனைவர் P. சூரியநாராயணன் ஆகியோருக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

சுரண்டை அரசு கலைக்கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற பேரா. M. ராமச்சந்திரன் அவர்களை கிளை உறுப்பினராக்குவதற்கு ஒப்புதலளிக்கப்பட்டது.

6.9.2018 அன்று திருச்சியில் நடைபெற்ற மாநில செயற்குழு விவரங்கள் தெரிவிக்கப்பட்டன. 29.9.2018ல் ஈரோட்டில் நடைபெறும் மாநில மாநாடு பற்றிய விவரங்கள் விளக்கப்பட்டன. மாநாட்டில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களுக்கு பேராளர் கட்டணமும் பஸ்கட்டணமும் அளிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருளாளர் எஸ். விஸ்வநாதன் நன்றி கூறினார்.

**பேரா. மணிவண்ணன்**

கிளைச்செயலாளர், புதுக்கோட்டைக்கிளை

## தூத்துக்குடி கிளை

எமது கிளையின் செப்டம்பர் மாதக் கூட்டம் 11.09.2018 செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணி அளவில் தூத்துக்குடி பேரா. S.C. எடிசன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கிளையின் இணைச் செயலர் பேராசிரியர் M.J. இன்பநாயகம் தலைமை தாங்கி அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

5.9.2018 அன்று திருச்சியில் நடைபெற்ற TANRECTA செயற்குழு கூட்டத்தில் இணைச் செயலர் பேராசிரியர் M.J. இன்பநாயகம் மற்றும் பொதுகுழு உறுப்பினர் பேரா. C. இமானுவேல் ஆகியோர் கலந்து கொண்டனர். பேராசிரியர் M.J. இன்பநாயகம் அவர்கள் செயற்குழு கூட்டத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளை கிளை உறுப்பினர்களிடம் பகிர்ந்து கொண்டார்.

கிளைச் செயலர் ம. கமல்ராஜ் 29.09.2018 (சனிக்கிழமை) ஈரோட்டில் நடைபெற உள்ள 18-வது மாநில மாநாட்டிற்கு உறுப்பினர்கள் அதிக எண்ணிக்கையில் கலந்து கொள்ள வேண்டுமென்றும், அதற்காக செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பற்றியும் கூறினார்.

G.C. உறுப்பினர் பேரா. இமேனுவேல் அனைவருக்கும் நன்றி கூறினார். கிளையின் அக்டோபர் மாதக் கூட்டம் 09.10.2018 இரண்டாம் செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணி அளவில் தூத்துக்குடி பேரா. S.C. எடிசன் அவர்கள் இல்லத்தில் நடைபெறும். 2017-2018 ஆம், மற்றும் 2018-2019 ஆம் ஆண்டிற்கான உறுப்பினர் கட்டணம் முறையே ரூ. 400/- நானூறு செலுத்தாதவர்கள் கிளையின் வங்கிக் கணக்கில் செலுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**Account No : 505561496 ; Indian Bank, Melur Branch, Tuticorin IFSC Code : IDIB000M083 A/C Name. Tamilnadu Retired College Teacher's Association, Thuthukudi.**

**பேரா. ம. கமல்ராஜ்**

கிளைச்செயலாளர், தூத்துக்குடி கிளை

## சேலம் கிளை

சேலம் கிளையின் பொதுக்குழுக்கூட்டம் 08.09.2018 சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் அரசு கலைக்கல்லூரி அறை எண். 12A-ல் கிளைத்தலைவர் பேரா. முனைவர் கொ. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. தலைவரின் வரவேற்புரைக்குப்பின் கிளைச்செயலர் பேரா. முனைவர் பெ. மாது கீழ்க்கண்ட



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



இரங்கல் தீர்மானத்தை முன்மொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

**இரங்கல் தீர்மானம்**

அரசியல் பணியில் நேர்மை, உழைப்பு என்ற கொள்கைக்கு சான்றாக, இரண்டு முறை பாரதப்பிரதமராக பொறுப்பேற்று மக்கள் நலப்பணிகளில் அக்கறையும் ஆர்வமும் காட்டி செயல்பட்ட இந்தியாவின் மேனாள் பிரதமர் அடல்பிகாரி வாஜ்பாய் அவர்கள், தொழிற்சங்கப் பணிகள் மற்றும் பொதுவுடமைக் கோட்பாடுகளில் பற்றுதல் கொண்டு, நீண்ட காலம் இந்திய பாராளுமன்ற உறுப்பினராகவும், சபாநாயகராகவும் இருந்த மதிப்பிற்குரிய சோம்நாத் சட்டர்ஜி அவர்கள், சேலம் கிளை உறுப்பினர் பேரா. K. துரைசாமி (சேலம் – 7 கல்லூரி விலங்கியல் துறை) அவர்கள், TNGCTA அமைப்பின் சேலம் – தர்மபுரி நாமக்கல் கிருஷ்ணகிரி மண்டலத் தலைவர் பேரா. பழனிவேல் அவர்கள் பழனிக்கிளை உறுப்பினர் பேரா. சுந்தர்ராஜன், தென்மேற்கு பருவ மழையால் கேரளாவில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் உயிரிழந்த 300-க்கு மேற்பட்ட பொதுமக்கள் ஆகியோரின் மறைவுச் செய்தியைக் கேட்டு சேலம் கிளை வேதனையடைவதோடு, அன்னார்களை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தார்க்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறது.

கிளைத்தலைவர் தனது உரையில் TANRECTA 18-ஆவது மாநாடு ஏற்பாடுகள் குறித்தும், மாநில மாநாட்டிற்கு கிளை உறுப்பினர்கள் அதிக எண்ணிக்கையில் கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக்கொண்டதோடு, 22.08.2018 அன்று TANRECTA -வின் 33ஆவது கிளையாக, பொள்ளாச்சியில் கிளை தொடங்கியுள்ளது பற்றி விளக்கிக் கூறினார்.

கிளைச்செயலர் தனது உரையில், TANRECTA சார்பாக கேரளா வெள்ள நிவாரண நிதியாக மாநிலத் தலைமை ரூ. 4 லட்சம் வழங்கியுள்ளது பற்றியும், தற்போது உறுப்பினர்கள் மாநிலத் தலைமைக்கு பேரிடர் நிதி எனும் பெயரில் விருப்பப்பட்ட தொகையை செலுத்த வேண்டுமென கேட்டுக் கொண்டார். 18-ஆவது மாநில மாநாட்டு மலருக்கு, சேலம் கிளையின் சார்பாக (ரூ.29000 + 1000 + 5000 = 35000) ரூ. 35 ஆயிரம் ரூபாய்க்கு உறுப்பினர்களிடமிருந்து விளம்பரம் பெறப்பட்டுள்ளது பற்றி எடுத்துக்கூறி அவர்களின் பெயரையும் வாசித்தார். 1979க்கும் 1996க்கும் இடைப்பட்ட காலத்தில் ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு பலன் அளிக்கும் வகையில், முழு ஓய்வூதியம் பெறுவதற்கு அக்காலத்தில் 33 ஆண்டுகளாக இருந்த காலஅளவு தற்போது 30 ஆண்டுகளாக குறைக்கப்பட்டு அரசு ஆணை பிறப்பித்துள்ளதாகக் கூறி இவ்ஆணையால் பயன்பெற உள்ள உறுப்பினர்கள் அரசுக்கு விண்ணப்பிக்கதற்குரிய விண்ணப்பம் கிளை சார்பாக வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். மேலும் கிளை உறுப்பினர்கள் அதிக எண்ணிக்கையில் தங்கள் சூழ்நிலை, வசதிக்கேற்ப நேராக 18-ஆவது மாநில

மாநாட்டு அரங்கிற்கு காலை 9.00 மணிக்குள் வரலாம் எனவும், வருகின்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் கிளை சார்பாக பேராளர் கட்டணம் செலுத்தப்படும் எனவும் கூறினார்.

பேரா. நரசிங்கம் அறக்கட்டளை நிதி, சேலம் கிளை பெறுவது தொடர்பாக எடுத்துக் கூறிய நிலையில், பேரா.முனைவர் கணேசன், சமீபத்தில் தமிழக தென்மாவட்டத்தைச் சார்ந்த மேனாள் பெண் **MLA** திருமதி. கிருஷ்ணவேணி அவர்களின் உடல்நலக்குறைவு மற்றும் வறுமை நிலையைப் பற்றி சமீபத்தில் **Whatsapp** மூலம் வந்த செய்தியைக் குறிப்பிட்டு, உண்மையாக அரசியலில் இருந்து செயல்பட்டு வறுமையில் இருக்கு அவருக்கு **TANRECTA** சார்பாக உதவுவதற்கு முடியுமா என்பதை குறிப்பிட்டு தனது கருத்தினை பதிவு செய்தார்.

கிளைப்பொருளர், பேரா. S. இராமச்சந்திரன் தனது உரையில் சேலம் கிளை ஆட்சிக்குழுவின் சார்பாக, கடந்த 05.09.2018ல் திருச்சியில் நடைபெற்ற **TANRECTA** மாநில செயற்குழுவில் கலந்து கொண்டதன் அடிப்படையில் **AIFRUCTO** பொதுச்செயலர் பேரா. பார்த்தசாரதி, **TANRECTA** பொதுச்செயலர் ஆகியோரது உரை, பொருளரின் வரவு செலவு தணிக்கை அறிக்கை மற்றும் கடந்த 03.08.18ல் டெல்லியில் நடைபெற்ற பேரணி, வருகின்ற அக்டோபர் அல்லது நவம்பர் மாதங்களில் கன்னியாகுமரியில் நடைபெறவுள்ள **AIFUCTO** மாநாட்டைப் பற்றியும் **TANRECTA** மாநில மாநாட்டிற்கு வருகைப்புரிய உள்ள 3 அமைச்சர் பெருமக்கள், மற்றும் சிறப்பு விருந்தினர்கள், தோழமைச் சங்கப் பொறுப்பாளர்களின் விபரங்களையும், கிளை நிதி தொடர்பான விபரங்களையும் எடுத்துரைத்த நிலையில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இறுதியாக துணைத்தலைவர் பேரா. முனைவர் ஏ. ஸ்ரீரங்கன் அவர்கள் நன்றிகூற கூட்டம் இனிதே முடிந்தது.

**தீர்மானங்கள் :**

1. தென்மேற்கு பருவமழையால், பெருவள்ளம் ஏற்பட்டு பாதிப்புக்குள்ளான கேரள மாநில மக்களுக்கு உதவும் வகையில் பேரிடர் நிதி எனும் பெயரில் கிளை உறுப்பினர்கள் தலா ரூ. 500/- வழங்கவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.
2. **TANRECTA** சார்பாக 29.09.2018-ல் ஈரோட்டில் நடைபெறவுள்ள 18-ஆவது மாநில மாநாட்டிற்கு சேலம் கிளையின் சார்பாக குறைந்தது 50 பேர் கலந்து கொள்ள வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

**அடுத்த கூட்டம் வருகிற 13.10.2018 சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில், சேலம் - 7 அரசு கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.**

**பேரா. முனைவர் பெ. மாது**
கிளைச்செயலாளர், சேலம் கிளை

## CHENNAI UNIT

135 members were present. Dr. V. Swaminathan presided . The President appealed to the members to make the Erode Conference of TANRECTA



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



a memorable and successful one by attending the same in large numbers . Three ministers, One Vice Chancellor and the commissioner of Treasury and Accounts are attending the conference at the request of tanrecta . He listed the achievements of the pensioners associations in Tamilnadu which includes pension revision based on 7th Central pay commission, full pension with effect from 1-10- 1979 for all pensioners with 30 of service, improvement in Health insurance scheme for pensioners and their spouses. The secretary applauded the good response from members for payments towards building fund and Kerala distress relief fund. He informed the house that the building fund collection will be sent to tanrecta state for utilizing the fund for buying a building for our association and the Kerala fund to the government of Kerela through tanrecta state to help the flood victims and their families. The secretary lamented the lethargic and piecemeal implementation of the pension revision for college teachers. Always revision of pension for any employee (State govt / Central govt / college teachers) consists of two stages, the first stage as recommended by the pay commission and as accepted by the TN government (2.57 factor in 7th pay commission) and then the 2nd stage based on the supreme court judgment in the DS Nakara case which guarantees a minimum pension in the minimum of the pay scale in which the employee retired for central and state government employees. The two stages are simultaneously announced and implemented and the 2nd stage includes promotion / career advancement in the new pay scales. But for college teachers, revision of pay scales are announced very late and more delayed is the career advancement scheme which is yet to be announced by the TN Government . That is why the scheme of pension revision has to go through many stages

i. 2.57 factor multiplication
ii. Minimum fixation in the pay scale at the time of retirement ( Floor limit fixation based on DS Nakara case).
iii. Miniumum of professors scale for all teachers with 22 years of total service or six years of service as LSG ( or ) 3 years' service as Associate professor ( Career Advancement in 7th pay revision.) and
vi. Formulation one which is implemented for all central government employees but which is a total dilution of option1 recommended by the pay commission.

The Chennai Unit of TANRECTA suggests the following amendements to the bye laws of TANRECTA for consideration in Erode General council of tanrecta.

(i) Term of office 2 years instead of 3 years as at present .

(ii) Executive to be convened at least once in 3 months instead of 6 months as at present.

(iii) A member cannot continue in the same state post for more 2 consecutive terms.

(vi) The number of central posts to be reduced to 7

The meeting ended with a vote of thanks by the Vice president, Dr . M Chandrasekaran Next meeting on 13th October at 4 p.m at Quaid E Millath College.

**Dr. R. Lawrence**

Secretary Tanrecta, Chennai Unit.

9087725798.

## KUMBAKONAM UNIT

The Kumbakonam Unit of Tanrecta met in the premises of Gopal Rao library, Town Hall Road, Kumbakonam, by 5.30, in the evening on **8th September, 2018, the second Saturday.** . President Prof. C.Rajasekaran chaired. Major, Dr. A.Gurusamy Principal, Government College for men (Autonomous) was the chief guest.. We congratulate the following members who celebrate their birthday in the month of September. **Prof. G. RENGARAJULU, [03 – 09 – 1944], Prof. Dr. S. SOLAIYAPPAN, [22 – 09 – 1947], Prof. P.MARIMUTHU, [ 22 – 09 – 1947], Prof. R. MURTHY, [14 – 09 – 1944 ] and Prof. Dr. V. SRINIVASAN, 05 – 09 – 1941.** 18th State Level conference of TANRECTA is to be held on **29th September, 2018**, the fourth Saturday of the month, in குருசாமிகவுண்டர் திருமணமண்டபம், பெருந்துறைரோடு, ஈரோடு We request all our members to attend the conference to make it a success. May god forgive all our sins in this holy month of Muharram . We wish our members a**Happy Dasara (Vijayadashami) Festival. Our unit member, beloved Prof. Dr. K.Anbazhagan's daughter Prof. A.Kanimozhi got married on 12 – 09 – 2018. We wish the couple Mrs. Kanimozhi and Prof Er. Sri K.Manikandan, to have a happy wedded life.** We once again remind our unit members to remit the subscription for the year 2018 – 2019. The subscription may be sent to the unit through NEFT. For NEFT it may be addressed to

**NAME: TAMILNADU RETIRED COLLEGE TEACHERS' ASSOCIATION – KUMBAKONAM BRANCH, Bank: CITY UNION BANK KUMBAKONAM TOWN BRANCH, 35/14, KAMATCHI JOSIER STREET, KUMBAKONAM**



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



**Account No.003 001 000 385 359**

**IFSCode:CIUB0000003**

**MICR Code: 612 054 003 Type of Account: Savings Account** Next **October, 2018, monthly meeting** will be held on **13th October, 2018, the second Saturday**,in the premises of Gopal Rao library, Town Hall Road, Kumbakonam, by 5.30, in the evening.

**Dr.D.Sukumar,**

Secretary, Kumbakonam Unit of TANRECTA

## சிதம்பரம் கிளை

மாதாந்திரக் கூட்டம் 8.9.2018 அன்று நடைபெற்றது. செயலர் வரவேற்புரைக்குப் பின் இம்மாதம் பிறந்த நாள் கண்ட பேராசிரியர் ஜி. தர்மலிங்கம், முனைவர் டி. விஸ்வலிங்கம் இருவருக்கும் பிறந்த நாள் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

**இரங்கல் செய்தி :** கிளையின் உறுப்பினர், கடந்த ஜுலை மாதம் 80 வயது நிரம்பியதற்காக வாழ்த்தப்பட்ட பேரா. முனைவர் T.P. கலியபெருமாள் அவர்கள் 23.8.18 அன்று இயற்கை எய்தினார் எனும் வருத்தமான செய்தி தாமதமாகத்தான் தெரியவந்தது. அவரை இழந்து வாடும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு இரங்கல்பதிவு செய்யும் முகத்தான் இருநிமிடங்கள் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. அவரது நண்பர் பேரா. சிவப்பிரகாசம் அவர்கள் அவரைப்பற்றிய நினைவுகளைப் பகிர்ந்தார்.

5.9.2018 அன்று திருச்சியில் நடந்த மாநிலச் செயற்குழுக்கூட்டத்தில் தானும் பேரா. எஸ் மணியும் கலந்து கொண்டதைச் செயலர் தெரிவித்தார். அப்போது கேரள மாநிலத்தின் பெருமழை, வெள்ளம் நிகழ்த்திய பேரழிவு குறித்தும் நமது தலைமைக்கழகம் உடனடியாக நிவாரணத் தொகை ரூ 4 லட்சம் அனுப்பியதும் ஒவ்வொரு கிளையும் உறுப்பினர்களிடமிருந்து பேரிடர் நிவாரணத் தொகை பெற்று அனுப்புமாறு கேட்டுக்கொண்டதற் கிணங்க நமது கிளையின் முதல் தவணையாக ரூ. 13,600 தலைமைக் கழக கணக்கில் செலுத்தப்பட்டது. நிவாரணத்தொகை குறித்து கூட்டத்தில் அறிவித்ததும் உறுப்பினர்கள் பெரும்பாலானோர் உடனடியாக தொகை தந்த பெருந்தன்மை போற்றுதற்குரியது. நன்கொடை தந்தோர் விபரம்.

தலா ரூ. 1000/- தந்தோர் முனைவர் ஜி. நடனம், பேரா. D. சுவாமிநாதன், செயலர் இளங்கோவன், பேரா. எஸ்.மணி, முனைவர் ஆர் சிவஞானம், பேரா. ஆர். முத்துக்குமரன் ஆக அறுவர் (6 x 600=6000)

தலா ரூ. 500/- தந்தோர் : முனைவர்கள் தியாகேசன், சி. மாரியப்பன், திருமதி. ஞ. பத்மாவதி, T. விஸ்வலிங்கம், K.P. சுப்ரமணியன், K. கலிய பெருமாள், பேராசிரியர்கள் பி. சிவப்பிரகாசம், ஜி. தர்மலிங்கம், அப்துல் ரஹிம், P. முருகேசன், கே. ஜெயராமன், T. முத்துக்குமரன், எஸ். முருகானந்தம், எஸ். சிவகுமார், தலைவர் மு. சிதம்பரராசன் 500 + அவரது மகள் திருமதி. செல்வி 100 (15 x 500 = 7500 + 100 = 7600)

2006க்கு முன்னால் சிதம்பரம் அரசு கலைக்கல்லூரியில் பணியாற்றி ஓய்வு பெற்ற பேராசிரியர்கள் 12 பேர் குடும்ப ஓய்வூதியர்கள் 3 நபர்களின் G.O. 145ன் படி ஓய்வூதியத் திருத்த ஆணை கோரும் விண்ணப்பம் கல்லூரி முதல்வரிடம் தரப்பட்டது குடந்தை இருவர், விழுப்புரம் ஒருவர், விருத்தாசலம் ஒருவர் ஆகியோரின் விண்ணப்பங்களும் அனுப்பப்பட்டு விட்டன. கரூர், விழுப்புரம் கல்லூரி முதல்வர்கள் திருத்த ஆணை வழங்கி கருவூலங்களுக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிகிறது. சில கல்லூரி முதல்வர்கள் விண்ணப்பங்களைப் பெற மறுக்கும் செய்தியும் வருகின்றது. 2006க்கும் பின்னர் ஓய்வு பெற்றவர்களையும் உள்ளடக்கிய தெளிவான ஆணைகள் வந்தால் தான் நிச்சயமற்ற சூழல் உருவாகும்.

2018-19 ஆண்டிற்கான உறுப்பினர் கட்டணம் AIFRUCTO சந்தா ஆகியவை அனைத்து உறுப்பினர்களாலும் செலுத்தப்பட்டு விட்டது என்பதை மகிழ்வுடனும் பெருமையுடனும் பதிவு செய்கின்றேன். அனைவருக்கும் நன்றி உரித்தாகுக.

இம்மாதம் இரு உறுப்பினர்கள் தங்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படவில்லை எனக் கூற கருவூலத்தில் விசாரித்ததில் இருவரும் நேர்காணலுக்குச் செல்லவில்லை என்பது தெரியவந்தது. ஒருவர் Digital life Certificate முறையில் பதிவு செய்தும் எனக்கு நிறுத்தப்பட்டது ஏன் என வினவ ஆய்ந்து பார்த்ததில் அதில் சிதம்பரம் கருவூலம் என்பதற்குப் பதிலாக சின்ன சேலம் கருவூலம் எனப்பதிவு செய்யப்பட்டுள்ளது தெரியவந்தது. கவனிக்காமல் விட்டது. அவரது குற்றமாகும். கூடிய வரை உள்ளூரில் இருப்பவர்கள் கருவூலத்தில் நேரில் சென்று பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம் என கருவூல அதிகாரி தெரிவித்தார். வெகு தூரத்தில் இருப்பவர்களுக்குத்தான் அல்லது மூப்பு காரணமாக நேரில்வர இயலாதவர்களுக்குதான் இந்த வசதி உள்ளது என்றும் கூறினார். மற்றவர் மறதி காரணமாக பதிவு செய்யவில்லை. இது அனைவருக்கும் ஒரு எச்சரிக்கையாகக் கூட கொள்ளலாம். இறுதியாக பேராசிரியர் தருமலிங்கம், முனைவர் T. விஸ்வலிங்கம் இருவரும் அருமையான பிறந்த நாள் விருந்தளித்த இருவருக்கும் நன்றி பாராட்டப்பட்டது. **அடுத்த கூட்டம் 13.10.2018 இரண்டாம் சனிக்கிழமை காலை நடைபெறும்.**

முனைவர் **க. இளங்கோவன்**
செயலாளர், சிதம்பரம் கிளை

## வேலூர் கிளை

வேலூர் கிளையின் செப்டம்பர் மாதக் கிளைக் கூட்டம், கிளைத்தலைவர் பேரா. ஜான் ஞானக்கண் தலைமையில் 11.09.2018 அன்று மாலை 5.30 மணிக்கு வேலூர் ஆசிரியர் இல்லத்தில் நடைபெற்றது. கிளைச்செயலர் அனைவரையும் வரவேற்றார்.

இம்மாதம் பிறந்த நாள் காணும் பேரா. D. ஜான் ஞானக்கண் (28.09.1952) மற்றும் பேரா. சசிகலா அமரசூரியா (27.09.1955) ஆகிய இருவர்க்கும்



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



வாழ்த்துகள்தெரிவிக்கப்பட்டன. 05.09.2018 அன்று திருச்சியில் நடைபெற்ற மாநிலச் செயற்குழுவில் கலந்து கொண்ட கிளைச்செயலர் அக்கூட்டத்தின் நிகழ்ச்சிகளை உறுப்பினர்களுக்கு விளக்கியுரைத்தார். 2006க்கு முன் ஓய்வுபெற்ற அனைத்துப் பேராசிரியர்களும் புதிய ஓய்வூதியத் திருத்தத்தின்படி ஓய்வூதியத் திருத்தம் செய்ய அதற்கென உள்ள படிவங்களை நிறைவு செய்து உரிய முறைப்படி கல்லூரி முதல்வர் RJD அவர்களிடம் மூன்று படிவங்களில் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

29.09.2018 இல் ஈரோட்டில் நடைபெறவிருக்கும் மாநில மாநாட்டு அழைப்பிதழ்கள் கூட்டத்தில் வழங்கப்பட்டன. வேலூர் கிளையிலிருந்து பதினைந்து உறுப்பினர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள உள்ளனர். நிறைய உறுப்பினர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள பொதுச்செயலர் கேட்டுக்கொண்டுள்ள செய்தியையும் செயலர் விளக்கியுரைத்தார்.

கூட்டத்தில் மேலும் பேரா. K. ரேவதி, (DKM மகளிர் கல்லூரி, வேலூர்) பேரா. S. மைதிலி (DMK மகளிர் கல்லூரி, வேலூர்) மற்றும் பேரா. D. பால்ராஜ் (ஊரிசுக் கல்லூரி, வேலூர்) ஆகிய மூவரும் வேலூர், கிளையில் புதிய உறுப்பினர்களாகத் தங்களை இணைத்துக் கொண்டனர். மேலும் பல உறுப்பினர்கள் சேருவதற்கு வாய்ப்புள்ளதாக அவர்கள் கூறியுள்ளார்கள். இம்மூவரையும் கைதட்டி ஆரவார மகிழ்ச்சியுடன் கிளை வரவேற்றுக்கொண்டது.

புதிய ஓய்வூதிய திருத்த ஆணையின்படி, 2006க்கு முன் ஓய்வு பெற்றவர்களில் பலர் படிவங்களை நிறைவு செய்து முதல்வரிடம் அளித்து விட்டார்கள் இன்று வரை அவற்றை அளிக்காதவர்கள் விரைந்து அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். படிவங்கள் செயலரிடம் உள்ளன.

பேரா. Dr.D. ஆதிகேசவலு மற்றும் பேரா. V. தனசேகரன் ஆகிய இருவரும் இணைந்து கூட்டத்திற்கு வந்திருந்த அனைவருக்கும் மாலைச் சிற்றுண்டி வழங்கிச் சிறப்பித்தார்கள். வழக்கம்போல் பழம் தரும் பேரா. R. ஆனந்தன், வாழைப்பழம் வழங்கிச் சிறப்புச் செய்தார்கள் மூவருக்கும் நன்றி.

**அக்டோபர் மாதக்கிளைக் கூட்டம் வேலூர் ஆசிரியர் இல்லத்தில் 09.10.2018-இல் மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.**

பேரா. முனைவர். **மு. குருசாமி,**
செயலாளர், வேலூர் கிளை

## திருநெல்வேலிக் கிளை

திருநெல்வேலிக்கிளையின் செப்டம்பர் 2018, மாதாந்திரக் கூட்டம் 14.09.2018 அன்று மாலை 6 மணிக்கு பேரா. M. கதிர்வேல் ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. வருகை புரிந்த உறுப்பினர்களை பேரா. M. சுடலையாண்டி வரவேற்றார்.

29.09.2018 அன்று ஈரோட்டில் நடைபெறவுள்ள 18வது மாநில மாநாட்டிற்கு அதிக அளவில் உறுப்பினர்கள் கலந்து கொள்ள விருப்பம் தெரிவித்தனர்.

2006க்கு முன் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதிய திருத்தத்திற்கான விண்ணப்பங்கள் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. விண்ணப்படிவம் கிடைக்காதவர்கள் செயலரை தொடர்பு கொள்ளலாம் (செல் 9443850844). மேலும் இது சம்பந்தமான அரசு ஆணை வரும் வரை பொறுத்திருப்பது நல்லது.

பொதுச்செயலரின் சுற்றறிக்கை 9/18 கடிதம் அனைவரின் பார்வைக்கும் சென்றது. இம்மாதம் (அக்டோபர் 2018) பிறந்த நாள் காணும் பேராசிரியர்கள் S. தோத்தாத்ரி, A. நிகமத்துல்லா, R. செல்வரத்தினம் பெர்னான்டோ, R. ஸ்டீபன் ரோட்ரிக் ஆகியோர் நோயற்ற வாழ்வுடனும் புகழுடனும், மன அமைதியுடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இச்சங்கம் அவர்களை வாழ்த்துகின்றது.

அக்டோபர் 2018, மாதாந்திரக் கூட்டம் 11.10.2018 அன்று (இரண்டாம் வியாழன்) மாலை 6 மணிக்கு வழக்கம் போல் டவுன் I.O.B.யூனியன் கட்டடத்தில் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பேராசிரியை A. வடிவம்மாள் வழங்கிய இன்சுவை விருந்திற்குப்பின் பேரா. S. அம்ப்ரோஸ் நன்றிகூற கூட்டம் இனிது நிறைவுற்றது.

பேரா. **தி. பார்வதிநாதன்**
செயலர், திருநெல்வேலி கிளை

**ஈரோடு கிளை**

ஈரோடு கிளையின் மாதாந்திர பொதுக்குழுக்கூட்டம் கடந்த 8.9.2018 அன்று காலை 10.30 மணிக்கு ஈரோடு ஒற்றுமை அரங்கில் கிளைத் தலைவர் முனைவர் K.R. பரமசிவம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு நமது பொதுச்செயலாளர் பேரா. E.P. பெருமாள் அவர்களும் மற்றும் மாநிலத் துணைத்தலைவர்கள் முனைவர் N. மாரிசாமி மற்றும் முனைவர் M. ராஜகோபால் அவர்களும் வருகை புரிந்து சிறப்பித்தனர்.

ஈரோடு கிளையின் செயலாளர் பேரா. M. கோபாலசாமி அனைவரையும் வரவேற்றார். கூட்டத்திற்கு பெருந்திரளாகப் பேராசிரியர்கள் வந்திருந்தனர். இம்மாதம் பிறந்த நாள் காணும் 7 பேராசிரியர்களின் பெயர்கள் வாசிக்கப்பட்டு வாழ்த்தும் கூறப்பட்டது.

இன்றைய கூட்டத்தில் சிக்கண்ணா அரசு கல்லூரி மற்றும் பல அரசு கல்லூரிகளிலும் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பேராசிரியர் M. அன்வர் அவர்கள் நமது கழகத்தில் இணைந்தார். இன்றைய கூட்டத்தில் கேரள மாநில வெள்ள பாதிப்புக்கு நமது TANRECTA அமைப்பு ரூ. 4,00,000/- கொடுத்துள்ள தகவல் கூறப்பட்டது. கடந்த 1.08.2018 அன்று சென்னையில் நமது மாநில பொறுப்பாளர்கள் உயர்கல்வித்துறை அதிகாரிகளை சந்தித்து பேசிய தகவலும் 3.8.2018 அன்று டெல்லியில் நடைபெற்ற போராட்டம் பற்றியும் விவரிக்கப்பட்டது.

ஈரோடு மாநாட்டிற்கான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. பல குழுக்களாக பேராசிரியர்கள் பிரிக்கப்பட்டு அனைவரும் செயல்பட்டு வருகின்றது.



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



நமது TANRECTA அமைப்பின் மாநில பொதுக்குழுக் கூட்டம் மாநாடு துவங்கும் நாளில் வருகின்ற 29.9.2018 அன்று காலை 9.00 மணிக்கு நடைபெற உள்ள தகவலை பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

ஈரோடு செயலர் PESION குறித்து பேசினார். UGC பற்றியும் பேசப்பட்டது. நமது மாநாட்டின் மையக் கருத்தாக **“கல்வியைக் காப்போம்”** என்ற வாசகத்தினை வலியுறுத்த உள்ளோம்.

இன்றைய கூட்டத்தில் மாநில துணைத்தலைவர்கள் முனைவர் N. மாரிசாமி அவர்கள் பேசும்பொழுது நமது TANRECTA அமைப்பு தான் வருடம் தோறும் மாநில மாநாடு நடத்துகின்றது என்றும் மாநாட்டு மலரும் நம் கழகம் தான் வெளியிடுகின்றது எனவும் ஈரோடு மாநாடு ஒரு திருப்புமுனை மாநாடாக அமையும் எனவும் கூறினார்.

முனைவர் M. ராஜகோபால் அவர்களும் பல கருத்துக்களை எடுத்துரைத்தார். மாநாட்டிற்கு அனைவரும் குடும்ப சகிதமாய் வந்து கலந்து கொள்ள வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது.

அடுத்து நமது பொதுச்செயலர் பேரா. E. P. பெருமாள் உரையாற்றினார். முனைவர் M. ராஜகோபால் அவர்கள் கோயம்புத்தூர் கிளை மேற்கொண்டு வரும் செயல்பாடுகள் பற்றியும் கருவூலம் மற்றும் RJD அலுவலகங்களுக்கு சென்று வந்தது குறித்தும் Software மற்றும் DCE Proceedings பற்றியும் கூறினார். நமது 18வது மாநாடு ஒரு திறவுகோலாக அமையும் எனக் கூறினார்.

நமது பொதுச்செயலர் உரையில் அரசு அதிகாரிகளையும் அமைச்சர்களையும் மாநாட்டிற்கு அழைப்பதின் நோக்கங்களை விவரித்தார். UGC பற்றியும் விளக்கினார். குடும்பத்துடன் மாநாட்டில் பங்கேற்கக் கேட்டுக் கொண்டார். ஓய்வூதியத்திருத்தம் மற்றும் 2006க்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களின் நிலை, GO 313 மற்றும் 2.57 Tactor CONCORDAT TABLE 1.1.96ல் ஓய்வு பெற்றவர்கள் 30 ஆண்டுகள் பணிநிறைவு செய்தால் முழு ஓய்வூதியம் கிடைப்பதற்கான நிலை குறித்து அவர் கூறும் பொழுது இது வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பு என்ற கருத்தினை வலியுறுத்தி பேசினார்.

கூட்டத்தில் பேசிய பாரதியார் பல்கலைக்கழகத்தின் மேனாள் பதிவாளர்கள் பேரா. S.P. விஸ்வநாதன் மற்றும் பேரா. சிலம்பண்ணன் ஆகியோர் Pension Revision, மலர்க்குழு மற்றும் Membership பற்றியும் குறிப்பிட்டனர். முனைவர் J. சுப்பரமணியன் அவர்கள் உறுப்பினர்கள் பற்றியும் நமது அமைப்பில் சேராதவர்கள் மற்றும் **“கல்வியைக் காப்போம்”** எனும் சூளுரை பற்றியும் குறிப்பிட்டார். பேரா. E. M. பழனிச்சாமி Pension பற்றியும் Treasury and ECS சார்ந்த கருத்துக்களை மையப்படுத்தி உரையாற்றினார். Pension Revision Statement மற்றும் Director of Pension பற்றியும் கூறினார். மைய-மாநில அரசுகளின் UGC PayMatrix பற்றியும் குறிப்பிட்டார் இறுதியாகப் பேசிய முனைவர் S. ஜெயசங்கர் Pension சார்ந்த கருத்துக்களை விவரித்தார். இவர்கள் அனைவருக்கும்

நன்றி. **ஈரோடு கிளை தமிழகம் தழுவிய பேராசிரியர்களை எதிர் நோக்கி செயல்பட்டு வருகின்றது நமது கிளையின் வருகின்ற கூட்டம் 13.10.2018 அன்று வழக்கம் போல் நடைபெறும்.**

பேரா. **M. கோபாலசாமி,**
செயலாளர், ஈரோடு கிளை

**விழுப்புரம் கிளை**

விழுப்புரம் கிளையின் பொதுக்குக் கூட்டம் 08.09.2018 சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு விழுப்புரம், வி.ஆர்.பி. மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பேரா. இரா. இராசசேகரன் அவர்களது தலைமையில் நடைபெற்றது. வருகைபுரிந்த உறுப்பினர்களை கிளை உறுப்பினர் பேரா. முனைவர் ந. கன்னையா அவர்கள் வரவேற்று உரையாற்றினார். "திங்கள் ஒரு குறள்" என்ற வகையில் பேரா. முனைவர் மா. சற்குணம் அவர்கள் "நன்றியில் செல்வம்" என்னும் அதிகாரத்தில் பின்வரும் குறளின் விளக்கத்தினை அளித்தார்:

**"ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்**
**தோற்றம் நிலக்குப் பொறை"** (1003)

கிளைத்தலைவர் தமது தலைமையுரையில், முதலாவதாக வருகைபுரிந்த உறுப்பினர்களுக்குத் தமது ஆசிரியர் தின வாழ்த்துக்களைத் தெரிவித்தார். தொடர்ந்து, ஓய்வூதியர்களுக்கான அடையான அட்டை (ID Card) மற்றும் மருத்துவக் காப்பீட்டுத்திட்டம் ஆகியவை தொடர்பான செய்திகளை உறுப்பினர்களுக்குத் தெரிவித்தார். ஈரோட்டில் நடைபெறவுள்ள நமது கழகத்தின் 18-வது மாநில மாநாட்டில் இக்கிளை உறுப்பினர்கள் அதிக எண்ணிக்கையில் கலந்துகொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுத்தார். கிளைச்செயலர் பேரா. இர. நிசார் அவர்கள் தமது அறிக்கையில் கடந்த ஒரு மாத காலத்தில் நிகழ்ந்த சங்க செயல்பாடுகளை விவரித்தார். 05.09.2018 அன்று திருச்சியில் நடைபெற்ற நமது கழகத்தின் மாநில செயற்குழுக் கூட்டத்தின் நிகழ்வுகளையும் தீர்மானங்களையும் உறுப்பினர்களுக்குத் தொகுத்து வழங்கினார். 21 உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட, ஓய்வூதியத் திருத்தத்திற்கான நிறைவு செய்யப்பட்ட படிவங்களை கிளைப் பொறுப்பாளர்கள் விழுப்புரம் அரசு கலைக் கல்லூரி முதல்வர் அவர்களிடம் அளித்தமையும், அதன்மீது எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கைகளையும் உறுப்பினர்களிடம் தெரிவித்தார். உறுப்பினர்களின் ஓய்வூதியத் திருத்த ஆணைகள் கல்லூரி முதல்வரிடமிருந்து மிகவிரைவில் கருவூல அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுவிடும் என்ற நற்செய்தியையும் உறுப்பினர்களுக்குத் தெரிவித்தார். மேலும் ஈரோட்டில் நடைபெறவுள்ள நமது கழகத்தின் 18-வது மாநில மாநாட்டில் மூன்று அமைச்சர் பெருமக்கள் மற்றும் கணக்கு & கருவூலத்துறை இயக்குநர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்ள இருப்பதால் இக்கிளையிலிருந்து அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்கள் வலியுறுத்தினார்.



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



பேரா. பீ. தனஞ்செயன் அவர்கள் "பிரமிய வழுக்கை/நீர் பிரம்பி" (Bacopa moneirifolii) என்னும் மூலிகைத் தாவரத்தின் மருத்துப் பயன்களை விவரித்தார். இக்கிளையின் மூத்த உறுப்பினர் பேரா. ஆர். நடராசன் (வரலாறு) அவர்கள் தமது உரையில் மூத்த குடிமக்களுக்குப் பயனளிக்கும் வகையில் நல்ல பல கருத்துக்களை எடுத்துரைத்தார்.

இம்மாதம் பிறந்தநாள் காணும் பேரா. முனைவர் பொன் நடராசன், பேர. முனைவர் எஸ். கோவிந்தராசலு, பேரா. ஏ. மோகன்ராஜ் மற்றும் பேரா. எஸ். சந்திரசேகரன் ஆகியோர்க்கும் இம்மாதம் மணநாள் காணும் பேரா. முனைவர் மா. சற்குணம், பேரா. சொ. பிரகாசம், பேரா. த. மதிவாணன், பேரா. ஆர். நடராசன் (வரலாறு), பேரா. முனைவர் பொன் நடராசன், பேரா. வ. இராசு மற்றும் பேர. கே. ஆர் லோகியா ஆகியோர்க்கும் வருகைபுரிந்த உறுப்பினர்கள் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். கிளை இணைச்செயலர் பேரா. பீ. தனஞ்செயன் அவர்களது நன்றிவுரைக்குப் பின் கூட்டம் நிறைவடைந்தது. தமது 50-வது மண நாளை முன்னிட்டு பேரா. ஆர். நடராசன் (வரலாறு ) அவர்கள் வருகைபுரிந்த உறுப்பினர்கள் அனைவருக்கும் சிற்றுண்டி மற்றும் தேநீர் வழங்கி சிறப்பித்தார்.

**அடுத்த மாதக் கூட்டம் 13.10.2018 சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு வி. ஆர். பி. மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது.**

பேரா. **இரா. நிசார்,**
செயலாளர், விழுப்புரம் கிளை.

**இராமநாதபுரம் கிளை**

இராமநாதபுரம் கிளையின் மாதாந்திர பொதுக்குழு கூட்டம் 08.09.2018 சனிக்கிழமை மாலை 6.30 மணி அளவில் இராமநாதபுரம் விவேகானந்தா சமுதாயக் கல்லூரி வளாகத்தில் கிளையின் துணைத்தலைவர் பேரா. எஸ். சேசுராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

வருகைபுரிந்த உறுப்பினர்களுக்கு அன்பான வரவேற்பும், கூட்டத்தின் கருதுபொருள் பற்றிய விளக்கமும் தலைமை உரையில் இடம்பெற்றது.

அடுத்து பேசிய கிளைச்செயலாளர், 29.09.2018 சனிக்கிழமை அன்று ஈரோட்டில் நடக்கவிருக்கும் 18-வது மாநில மாநாடு தொடர்பான செய்திகளையும், அழைப்பிதழையும் உறுப்பினர்களுக்கு வழங்கினார்.

19.07.2018 நாளிட்ட தமிழ்நாடு அரசு ஆணை எண்: 245 பற்றிய விளக்கத்தினை கிளைச்செயலாளர் வழங்கினார்.

கிளையின் உறுப்பினர் பேரா. முனைவர் R. காசிநாததுரை அவர்கள் "HUMAN IMMUNITY" என்ற தலைப்பில் மிகவும் பயனுள்ள உரையை கொடுத்தார்கள்.

கிளையின் மறைந்த மூத்த பேராசிரியர் M. வைரமணி அவர்களின் நினைவாக அவரது வாழ்க்கை துணைவியார் திருமதி மலர்விழி வைரமணி அவர்கள் இரவு உணவினை வழங்கினார்கள்.

**கிளையின் அடுத்த மாதாந்திர பொதுக்குழு கூட்டத்தினை வருகின்ற 13.10.2018 சனிக்கிழமை மாலை 6.00 மணி அளவில் இராமநாதபுரம் விவேகானந்தா சமுதாயக் கல்லூரி வளாகத்தில் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.** கிளை பொருளாளர் பேரா. எஸ். அமானுல்லாகான் அவர்களின் நன்றி உரையுடன் கூட்டம் நிறைவடைந்தது.

பேரா. **க. ஜீவானந்தம்**

செயலாளர், இராமநாதபுரம் கிளை

**செய்யாறு கிளை**

எமது செய்யாறு கிளையின் பொதுக்குழு 9.9.2018 அன்று காலை 10.30 மணி அளவில் செய்யாறு, அரசு கலைக்கல்லூரி வளாகத்தில் கிளைத்தலைவர் முனைவர் பேரா. P. மோகன் குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் அனைவரையும் வரவேற்று மாதம் ஒருகுறள் அடிப்படையில்

பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை அதுஉலகத்து
எப்பால் நூலோர்க்கும் துணிபு.

எனும் குறளைக் கூறி அதன் பொருளை விளக்கினார். பின்பு பிறந்தநாள், மணநாள் காணும் பேராசிரியப் பெருமக்கள் அனைவரின் பெயர்களையும் செயலர் வாசிக்க, அனைவரும் வாழ்த்தினர். பிறந்தநாள் : பேரா. முனைவர் M. தேவதாஸ் அவர்கள்; மணநாள் கண்ட பேராசிரியர்கள் : 1. பேரா. V. சிவப்பிரகாசம், 2. பேரா. T. சங்கரலிங்கம், 3. பேரா. R.V. ரகுராமான், 4. பேரா. M. கந்தசாமி ஆகியோர், வாழ்த்து பெற்றனர். மாநில செயற்குழுவில் கலந்து கொண்ட பேரா. Dr.E. மெய்யப்பன் அவர்கள் செயற்குழு பற்றிய செய்தியினை பொதுக்குழுவில் விளக்கினார். பின்னர் விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டன. தலைமையின் வழிகாட்டுதல் பற்றியும் விவாதிக்கப்பட்டது. உறுப்பினர்களை பாகுபாடு செய்யாமல், அனைவருக்கும் ஊதிய திருத்தம் கிடைக்கப் பெறும் வகையில் தெளிவான நடைமுறையினை தலைமை கோரிப்பெற வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

பின்னர் உறுப்பினர்கள் 18வது மாநில மாநாட்டுக்கு சென்றுவர திட்டமிடப்பட்டது. பொருளாளர் பேரா. L. குப்புசாமி அவர்கள் நிதிநிலை அறிக்கையினை பொதுக்குழுவில் வைத்தார். ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இறுதியாக தேனீருக்குப்பின் கிளைத்துணைத்தலைவர் பேரா. Dr.R. அஞ்சப்பன் அவர்கள் நன்றி கூறியதுடன் கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

**பேரா. வேணு சிவப்பிரகாசம்**

கிளைச்செயலாளர், செய்யாறு கிளை

**திருவாரூர் - நாகைகிளை**

திருவாரூர் – நாகை கிளையின் பொதுக்குழு கூட்டம் 12.09.2018 அன்று மாலை கிளைத் தலைவர் பேரா.R. நாராயணசாமி அவர்கள் இல்லத்தில் அவரது தலைமையில் நடைபெற்றது. கிளைத்தலைவர் அனைவரையும் வரவேற்று இயக்க செய்திகளைப் பற்றி எடுத்துரைத்தார்.



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



**இரங்கல் தீர்மானம் :** எமது சங்க உறுப்பினரும் திரு.வி.க. அரசு கலைக்கல்லூரியில் பணியாற்றி ஓய்வு பெற்ற நூலகருமாகிய திரு. V. சுகுமாறன் அவர்கள் மனைவி திருமதி. மீனாட்சி அண்ணி அவர்கள் 10.9.2018 அன்று காலமானார். அவரது மறைவுக்கு இக்கிளை தமது வேதனையை தெரிவித்துக் கொள்வதோடு அவர்தம் குடும்பத்துக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

மறைந்த முன்னாள் முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி மற்றும் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்கும் இக்கிளை ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றது. ஓய்வூதிய திருத்தம் கோரும் விண்ணப்ப படிவம் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.

ஈரோட்டில் நடைபெறும் மாநாட்டுக்கு அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்கள் கலந்து கொள்ள தீர்மானிக்கப்பட்டது. இந்த ஆண்டு சந்தா தொகை ரூ.500/– செலுத்தாத உறுப்பினர்கள் விரைவில் செலுத்தும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது. பேரா. M. நடனசுந்தரம் அனைவருக்கும் சிற்றுண்டி அளித்து சிறப்பித்தார். கிளைச் செயலர் பேரா. சி. கனகசுந்தரம் நன்றியுரைக்குப் பின் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

பேரா. நரசிங்கம் அறக்கட்டளை நிதியிலிருந்து திருவாரூரில் இயங்கி வரும் பாரதி முதியோர் இல்லத்துக்கு இந்த ஆண்டு (2018) நிதி உதவிக்கு விண்ணபிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

பேரா. S. **கனகசுந்தரம்**

செயலாளர், திருவாரூர் – நாகைகிளை

**கோவை நீலகிரி கிளை**

இக்கிளையின் கூட்டம் 8.9.2018 சனிக்கிழமை கோவை, அரசு கலைக்கல்லூரியில் பிற்பகல் 4.30 மணி அளவில் நடைபெற்றது. கிளைத்தலைவர் முனைவர் மு. சக்கரபாணி உறுப்பினர்களை வாழ்த்திவரவேற்றார்.

**இரங்கல் :** 1. இந்தியாவின் பிரதமராக மூன்று முறை பதவி வகித்து அனைவராலும் போற்றப்பெற்றவர் திரு. அடல் பிகாரி வாஜ்பாய் அவர்கள், ஒரு தேசிய தலைவராகத் திகழ்ந்தவர். அவர் 16.8.2018 அன்று மரணம் அடைந்தார்.

2. அண்மையில் கேரளாவில் பெய்த அடைமழை காரணமாக பேரிழப்பு ஏற்பட்டதோடு, சுமார் 400க்கும் மேற்பட்டோர் மரணம் அடைந்தனர், பல்லாயிரக்கணக்கானோர் துயரமுற்றனர்.

3. பேரூர் சாந்தலிங்கராமசாமி அடிகள் நோய்வாய் பட்டிருந்தநிலையில் 31.8.2018 அன்று இயற்கை எய்தினார். தமிழுக்கும் சைவத்திற்கும் தொண்டு செய்த சான்றோர் ஈன்றோரின் தவப்புதல்வர்.

இவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடம் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தினர்.

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



தலைவர், துயருற்ற கேரள மக்களுக்கு உறுப்பினர்கள் நன்கொடை வழங்க வேண்டுகோள் விடுத்தார்.

பொள்ளாச்சி கிளை 22.8.2018 அன்று உதயமானது. NGM கல்லூரி உடுமலை அரசு கலைக்கல்லூரி, GVGV கல்லூரிகளில் பணியாற்றி ஓய்வுபெற்றவர்கள் இதன் உறுப்பினர்கள் ஆவர். கிளை உறுப்பினர்கள் அக்கிளைக்கு வாழ்த்து கூறினர்.

**மாநில மாநாடு :** நம் கழகத்தின் 18–ஆம் மாநில மாநாடு ஈரோட்டில் 29.9.2018 சனிக்கிழமை நடைபெறவுள்ளது. மாநாட்டிற்கான அழைப்பிதழ் இந்தமாத செய்தி மடலில் இணைக்கப்பெற்றுள்ளது. அதிக அளவில் உறுப்பினர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் எனவும், கிளை சென்று வரும் செலவினங்களை ஏற்றுக் கொள்ளும் எனவும் தலைவர் கூறினார். மாநாட்டு மலருக்கு விளம்பரங்கள் அளித்த உறுப்பினர்களுக்கு தலைவர் நன்றி கூறினார்.

புதிய உறுப்பினர்கள் : கீழ்க் கண்ட உறுப்பினர்கள் நம் கிளையின் புதியவர்களாக இணைந்தனர். தலைவர் அவர்களை அறிமுகப்படுத்தி வரவேற்று வாழ்த்தினார். உறுப்பினர்களும் வாழ்த்து கூறினர்.

1. பேரா. திருமதி. சாந்தா மேனன் (ஆங்கிலத்துறை, PSG கிருஷ்ணம்மாள் கல்லூரி)
2. பேரா. R. திருநாவுக்கரசு (பொருளியல் துறை, PSG கலைக்கல்லூரி)
3. Dr. N. ஜெகநாதன் (பொருளியல் துறை, CBM கல்லூரி)
4. பேரா. திருமதி. வசந்தா (பொருளியல் துறை, GVGV கல்லூரி)
5. Dr. N. பாலுசாமி, (Co-operator, Dept. SRKV)

பிறந்தநாள் வாழ்த்து : அடுத்து இணைச் செயலர் சங்கமேஸ்வரன் இந்த மாதம் பிறந்த நாள் காணும் பேராசிரியர்களின் பெயர்களைப் படித்து வாழ்த்து கூறினார். உறுப்பினர்களும் கரவொலி மூலம் வாழ்த்து தெரிவித்தனர். இவர்களில் கீழ்க்கண்ட பேராசிரியர்கள் வந்திருந்த உறுப்பினர்களுக்கு இனிப்பு, காரம், தேநீர் வழங்கி மகிழ்வித்தனர். அவர்கள் வருமாறு : C. கோவிந்தராஜ், Dr.P.K. சென்னியப்பன், N. ஆத்மநாதன், B. கணேசன், Dr.S. சுப்ரமணியன், திருமதி R. சியாமளா தேவி, S. கருங்கண்ணன், திருமதி. S. புனித குமாரி, K. பழனிசாமி, Dr.G.M. நடராஜன், திருமதி கனகம் துரைராஜன், Dr.M. சக்கரபாணி ஆவர்.

**முக்கிய அறிவிப்பு :** உச்ச நீதி மன்ற தீர்ப்பிற்கிணங்க, தமிழ் நாடு அரசு வெளியிட்டுள்ள G.O. 245 நாள் 19.7.2018 படி 1.10.1979- 30.6.96 இடைப்பட்ட ஆண்டுகளில் அரசு பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு முழு ஓய்வூதியம் பெற 33 (NQS) ஆண்டுகள் நிறைவு பெற்றிருக்க வேண்டும் என்பதை மாற்றி 30 என ஆணையிட்டுள்ளது. இந்த ஆணை (G.O. 145) செப்டம்பர் TANRECTA வில் வெளியிடப்பட்டுள்ளது. நம் கிளை உறுப்பினர்கள் NQS 33 ஆண்டுகள் இல்லாமல் குறைவான ஓய்வூதியம் பெற்றவர்கள் உரிய படிவத்தில் (Form) முதல்வருக்கு விண்ணப்பிக்க வேண்டும். உரிய படிவங்களை நம் கிளை தயார்





செய்து வைத்துள்ளது. விபரம் வேண்டுவோர் நம் கிளை இணைச் செயலர் பேரா. சங்கமேஸ்வரரைத் தொடர்பு கொள்ளவும்.

செல் : 948677731 / 9944859042

பொருளாளர் Dr.K. சுப்ரமணியன் நன்றிகூற கூட்டம் நிறைவுற்றது.

**இரங்கல் அறிவிப்பு :** நம் கிளை உறுப்பினரும், திருச்சி தேசிய கல்லூரி முதல்வராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவருமான பேரா. S. கண்ணன் அவர்கள் 12.9.2018 கோவையில் மரணம் அடைந்தார்கள் என்ற செய்தி அறிந்து வருந்தினோம், அவர் குடும்பத்தினர் ஆறுதல் பெற வேண்டுகிறோம்.

2. சென்னை குருநானக் கல்லூரி ஆங்கிலத்துறையில் பணியாற்றி ஓய்வுபெற்றவரும் நம் கிளை உறுப்பினருமான பேரா. கீதா பாலகிருஷ்ணன் அவர்களின் தந்தை Dr.M. பாலகிருஷ்ணன் 13.8.2018 அன்று மரணம் அடைந்தார் அவருக்கு இரங்கலையும் குடும்பத்தினருக்கு ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**கிளையின் அடுத்த கூட்டம் 13.10.2018 சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கோவை அரசுகலைக்கல்லூரியில் நடைபெறும் உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டுகிறோம்.**

**முனைவர் மு. சக்கரபாணி**
தலைவர், கோவை–நீலகிரி கிளை

## கன்னியாகுமரிக் கிளை

கன்னியாகுமரிக்கிளையின் மாதாந்திரக் கூட்டம், பொதுக்குழுக் கூட்டமாக 11.9.2018 அன்று தலைவர் Dr.R. இலச்சுமண சர்மா அவர்கள் தலைமையில் மாலை 4.30 மணிக்கு Y.M.C.A. கூட்ட அரங்கில் நடந்தது வந்தவர்களை பேரா. Dr.M. பத்மநாபன் அவர்கள் வரவேற்றார்.

கூட்டத்தில் தொடக்கத்தில் கிளையின் நிறுவனர் பேரா. Dr.V.T. செல்லம் அவர்கள் ஆசியுரை வழங்கினார்கள். கிளையின் வளர்ச்சிக்கு நன்கொடை ரூ. 1000/– தந்தார்கள். கடந்த கூட்ட அறிக்கை படிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. 2017 – 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. வரவு செலவு கணக்கு கிளைத் தணிக்கை செய்து தந்த பேராசிரியர்கள் திரு. மாடசாமி, திரு. டேவிஸ் கருமை இருவர்க்கும் அவையில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

கிளைத் தலைவர் தம் உரையில் நமக்கு இன்னும் கிடைக்க வேண்டிய UGC ஊதிய உயர்வுகளுக்காக கிளையினர் என்னென்ன செய்து கொண்டிருக்கிறோம். நம் தலைமைக்கழகத்தினர். எவ்வாறு முனைந்து செயல்படுகின்றனர் என்பதை எல்லாம் தெரிவிக்க அவைக்கு கூறினார்.

மேலும் வரும் செப்டம்பர் 29–ஆம் நாள் நடைபெறும் மாநிலமாநாட்டில் பெருமளவில் கலந்து கொள்ள வேண்டும் என உறுப்பினர்களைப் பெரிதும் தலைவர் வேண்டிக் கேட்டுக்கொண்டார். இந்த மாநாடு முடிந்து திரும்பும் போது

UGC ஊதிய நிர்ணயத்தை தெரிவித்து நாம் அடுத்த செயற்குழுவில் சந்திக்கலாம் என்றும் தலைவர் குறிப்பிட்டார்.

கூட்டத்தின் முடிவில் பேரா. ம. பால் அவர்கள் நன்றியுரையாற்றினார். **அடுத்த மாதக்கூட்டம் 9.10.2018 அன்று நடைபெறும்.**

பேரா. Dr.S. **குமாரசுவாமி**
செயலாளர், கன்னியாக்குமரிகிளை
செல் : 94435 - 81130

**காஞ்சிபுரம் கிளை**

எமது கிளையின் மாதாந்திர பொதுக்குழு கூட்டம் 14.9.2018 வெள்ளிக்கிழமை காலை10.00 மணியளவில் பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில் தலைவர் பேரா. எம்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில் நடந்தது. வந்திருந்த உறுப்பினர்களை தலைவர் வரவேற்று பேசியபின்னர் கூட்ட நிகழ்வுகள் எடுத்துக் கொள்ளப்பட்டு பேசப்பட்டன.

விவாத விபரங்களும் ஏற்கப்பட்ட தீர்மானங்களும் :

1. ஆகஸ்ட் மாத இயக்க நடவடிக்கைகளை செயலர் உறுப்பினர்களுக்கு தெரிவித்தார்.
2. இம்மாதம் 29-ம் நாள் ஈரோட்டில் நடைபெறவுள்ள நமது இயக்கத்தின் 18-வது மாநில மாநாட்டில் பேரா.ப்பி.பி. ஆர். சுப்ரமணியஷாவும் செயலரும் கலந்து கொள்ளும் தகவலை செயலர் உறுப்பினர்களுக்கு தெரிவித்தார்.
3. 20.8.2018 அன்று 80 அகவை நிறைவு செய்த மூத்த உறுப்பினர் பேரா. ஏ. அருணாசலம் அவர்களுக்கு தலைவர், செயலர் மற்றும் பேரா. முனைவர் ப்பி. பரமசிவம் ஆகியோர் நேரில் சென்று பொன்னாடை போர்த்தியதையும் அன்னாருக்கு 1.8.2018 முதல் 20% கூடுதல் ஓய்வூதியம் கிடைத்த விவரத்தையும் செயலர் தெரிவித்தார்.
4. 19.7.2018 தேதியிட்ட நிதித்துறை (PGCI) அரசாணை எண் 245ன் வாயிலாக உயர் ஓய்வூதியம் பெற தகுதியுள்ள பேரா.எம்.எஸ். கிருஷ்ணமூர்த்தி மற்றும் பேரா. எம். மாசிலாமணி ஆகியோருக்கு உரிய விண்ணப்ப படிவங்களை நிறைவு செய்து கல்லூரி வாயிலாக அனுப்ப செயலர் உரிய மேல் நடவடிக்கைகளை மேற்கொண்டார்.
5. 7-வது மைய ஊதியக் குழுவின் பரிந்துரைகளின்படி பல்கலைக்கழக மான்ய குழுவின் திருத்தியமைக்கப்பட்ட ஓய்வூதியம் விரைவில் கிடைத்திட உரிய உதவிகளை கிளைகளுக்கு செய்ய வேண்டுமென மைய பொறுப்பாளர்களை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

**அடுத்த பொதுக்குழுக் கூட்டம் 10.10.2018 அன்று நடைபெறும்** என்ற அறிவிப்புடன் மூத்த உறுப்பினர் பேரா. ஏ. அருணாசலம் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**பேரா. இ.எம். சுப்ரமணியன்**
செயலாளர், காஞ்சிபுரகிளை



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



**DINDIGUL UNIT**

The meeting of our unit was held in the residence of Prof. Sivasubramanian, the president of our unit on 8.9.2018. The President welcomed the gathering and hosted them. The members of our unit were extremely happy and jubilant to learn that a new unit of Tanrecta has been started in POLLACHI. The members of our unit are anxious to attend and participate in our state conference to the held on 29.9.2018 in Erode and make it a great success. Our members who retired before 2006 have submitted their filled in forms to their respective colleges for getting their pension revised hased on 7th pay commission. The meeting came to an end with the vote of thanks proposed by our unit.

**Dr.R. Mummatchi**
Secretary, Dindigul Unit.

**PORAYAR UNIT**

The meeting was held on 12th September 2018 at 05.00 p.m. in the premises of Tharangambadi Taluk Retired Officials Association. The Unit President Prof.A.Arul Mariyanathan presided over the meeting. Dr.G.Jonas Gunasekaran, Joint Secretary of the Unit extended a very warm welcome to the members.

The Treasurer of the Unit Dr.Thambia Prabudas read the circulars No. 8/18 dated 06.08.2018 and No.9/18 date 09.09.2018 received from the General Secretary Prof.E.P.Perumal and recorded.

The information regarding the 18th Annual Conference to be held at Erode on 29th received from the Organizing Secretaries of the conference was read and recorded.

**After detailed discussion, the following decisions were taken:**

1. Decided to participate in the 18th Annual Conference to be held at Erode on 29th in large number and requested Dr. Thambia Prabudas, our Treasurer and Dr. S. Sukumar to make all arrangements including travel.
2. Congratulate Dr. Thambiah Prabudas for the award of the title “Kalvi Bharathi” to him by the Lions Clubs International in its ‘Teachers Day’celebration held on 08.09.2018 at Pattukkottai and thank the Lions Clubs International.
3. Decided to invite the recently retired professors from TBML College Dr. M. Ravichandren and Prof. D. Devadass.

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



With Dr. Thambiah Prabudas, our treasurer, proposing vote of thanks, the meeting came to an end.

**Dr.G.Jonas Gunasekaran**

Joint Secretary, Porayar Unit

**பழனிக் கிளை**

பழனிக்கிளையின் செப்டம்பர் மாதக் கூட்டம் 11.09.2018 செவ்வாய்க்கிழமை பகல் 11.30 மணிக்கு நளபாகம் உணவகத்தின் விழா அரங்கில் நடைபெற்றது. கிளைத்தலைவர் பேராசிரியர் S.P. மாணிக்கம் தலைமையேற்றார். பேராசிரியர் P. கருணாநிதி இறையருள் பாடல் பாடக் கூட்டம் தொடங்கியது.

**பிறந்தநாள் வாழ்த்து :** செப்டம்பரில் பிறந்தநாள் காணும் பேராசிரியர்கள் S. சரத்சந்திரன், S. முனியாண்டி, S. அருணாச்சலம், P. சுப்பிரமணியன், R. திருமலைச்சாமி ஆகியோருக்குத் துணைத் தலைவர் பேராசிரியர் S. இரத்தினசபாபதி வாழ்த்துரைத்தார்.

**தலைவர் உரை :** அரசாணை 145-ன் படி பல்கலைக் கழக மான்யக் குழுவின் ஊதிய உயர்வுக்கானப் படிவங்களை எவ்வாறு பூர்த்தி செய்ய வேண்டும், என்னென்ன சான்றிதழ் நகல்கள் இணைக்க வேண்டும் என்பன போன்ற விபரங்களைத் தலைவர் விளக்கமாக எடுத்துரைத்தார். கிளையின் சார்பாக உறுப்பினர்களுக்குப் படிவங்கள் வழங்கப்பட்டன. கூட்டத்திற்கு வர இயலாதவர்களுக்கு படிவங்கள் அஞ்சலில் அனுப்பப்பட்டன. பல கிளைகள் படிவங்களைப் பூர்த்தி செய்து உரியவர்களிடம் பணப்பயன் நடவடிக்கைக்குச் சமர்ப்பித்துள்ளன என்றாலும், சரியான நெறிமுறைகள் தெரியாத நிலையே நீடிக்கிறது. பழனி சார்நிலைக் கருவூலத்தில் நம் பல்கலைக்கழக ஊதிய உயர்வு சம்பந்தமான செய்திகள் ஏதும் இல்லை படிவங்களைப் பூர்த்தி செய்யும் வேலைகள் நடைபெறுகின்றன. விரைவில் வெளிச்சம் கிடைக்கும்.

செயலர் செய்தி : கிளைச் செயலர் பேராசிரியர் துரை. சுந்தரமூர்த்தி 5.9.2018-ல் திருச்சியில் நடைபெற்ற மாநிலச் செயற் குழுவின் நிகழ்வுகளைச் சுருக்கமாக எடுத்துரைத்தார். 18-வது மாநில மாநாடு 29.09.2018 சனிக்கிழமையன்று ஈரோட்டில் நடைபெறுகிறது. அம்மாநாடு சிறப்புற நடைபெறும். அமைச்சர் பெருமக்கள் ஆன்றோர் சான்றோர் அனைவரும் பங்கேற்கின்றனர். பழனிக்கிளை உறுப்பினர்கள் அதிக எண்ணிக்கையில் பங்கேற்க வேண்டும் என செயலர் வேண்டுகோள் விடுத்தார்.

**பழனிக்கிளையில் புதிய வரவுகள் :** பழனிக் கிளையின் உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிக்கிறது புதிய வரவுகள் நம் வலிமையைக் கூட்டுகின்றன. பேராசிரியர்கள் வெங்கிடுசாமி, இராஜரத்தினம் ஆகியோரைத் தொடர்ந்து பேராசிரியர்கள் R. கண்ணன், V. கந்தசாமி, D. சுபாஷ்சந்திரன், P. மோகன் ஆகியோர் நம் கிளை உறுப்பினர்களாகின்றனர். அவர்களை அன்புடன் வரவேற்கிறோம். அவர்களுக்கு வரவுரைத்து வாழ்த்திப் பேசினர் பேராசிரியர் Z.S. பழனிச்சாமி மற்றும் பேராசிரியர் N. மாரிசாமி.





**நன்றி உரை :** இணைச் செயலர் பேராசிரியை மரகதம் சிவானந்தம் நன்றியுரைக்கக் கூட்டம் நிறைவுற்றது. அதன் பின் விருந்தோம்பல் சிறப்புற அமைந்தது.

**அக்டோபர் மாதக் கூட்டம் :** அக்டோபர் மாதக் கூட்டம் 09.10.2018 செவ்வாய் மாலை 5 மணிக்கு நளபாகம் விழா அரங்கில் நடைபெறும் சந்திப்போம்.

**இரங்கல் செய்தி :** பழனிக் கிளையின் உறுப்பினர் பேராசிரியர் P. இராஜகோபால் கோவை மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இயற்கை எய்தினார். அன்னாரின் இறுதிச் சடங்குகளில் உறுப்பினர்கள் அதிக அளவில் பங்கேற்று இரங்கல் தெரிவித்தனர்.

பேராசிரியை P. சந்திராவின் தாயார் இயற்கை எய்திய செய்தி கேட்டுப் பழனிக்கிளை இரங்கல் தெரிவித்து இருநிமிடம் மௌன அஞ்சலி செலுத்தியது.

பேராசிரியர் **துரை. சுந்தர மூர்த்தி,**

செயலர், பழனிக்கிளை

9443705850, 7010441506.

**கரூர் கிளை**

9.9.2018 அன்று இரண்டாம் ஞாயிற்றுக்கிழமை கரூர் கிளையின் மாதாந்திரக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு கிளைத்தலைவர் பேரா. R.பாண்டியராஜ் அவர்கள் தலைமையேற்றார் கிளை உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் பல்வேறு விசயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. அவற்றில்

1. திருச்சி செயற்குழு மாநாட்டு விபரங்கள் :

i) ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளை வடமாநிலங்கள் பலவற்றில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. என்றும்

ii) ஒரு சில மாநிலங்களில் அமல் படுத்துவதற்காக அந்தந்த மாநில அரசுகள் குழு அமைத்துள்ளன என்றும்

iii) 2006-க்குப்பின் ஓய்வுபெற்றவர்களுக்குரிய ஓய்வூதிய திருத்த ஆணையை வெளியிடுவதற்கு சம்பந்தப்பட்ட துறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆணை விரைவில் வெளியாகும் என்றும்

iv) நவம்பர் 23,24 & 25 தேதிகளில் AIFUCTO மாநாடு நம் கன்னியாகுமரியில் நடைபெறும் என்றும் AIFRUCTOபொதுச் செயலர் பேரா. பார்த்தசரதி அவர்களால் கூறப்பட்டது என்பதை உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

2. TANRECTA செயலர் பேரா. E.P. பெருமாள் அவர்கள் தமிழக அரசின் மூன்று அமைச்சர்களை சந்தித்து மாநாட்டில் தலைமையேற்கவும், உரையாற்றவும் இசைந்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்தார். மாநாட்டில் அழைப்பிதழ் மாதிரி நமது இம்மாத இதழில் அச்சிடப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் அனைவரும் அதனை உற்று நோக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. கேரளாவின் வெள்ள நிவாரண நிதிக்காக நம் தலைமைக்கழகம் ரூ. 4 லட்சம் வழங்கியுள்ளதையும் உறுப்பினர்கட்டு தெரிவிக்கப்பட்டது.
4. சங்க வளர்ச்சி நிதியாக ரூ. 500/-ம் பேரா. நரசிங்கம் அறக்கட்டளை நிதியாக ரூ.500/-ம் (இவையிரண்டும் ஒரு தடவை மட்டும் செலுத்தினார் போதும்) உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்க வேண்டும் என்று தலைமைக்கழகம் கேட்டுக் கொண்டதை உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

**தீர்மானங்கள் :**

i) வரவிருக்கும் மாநாட்டிற்கு அதிக அளவில் உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

ii) மாநாட்டில் கலந்து கொள்வோருக்கு, பேராளர் கட்டணம் ரூ.200/- பயணப்படியாக ரூ.200/-ம் கிளை நிதியிலிருந்து வழங்கப்படும் என உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

iii) அனைத்து உறுப்பினர்களுக்கு தனித்தனியாக தொலைபேசியில் தொடர்பு கொண்டு மாநாட்டில் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என வற்புறுத்தவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

iv) 2006 முன் ஓய்வு பெற்றவர்களுக்கு கரூர் கருவூலத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் மீது தொடர் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவிக்கப்பட்டது.

v) நம் கிளையின் உறுப்பினர் பேரா. செல்லமுத்து அவர்களின் தந்தை N.இராமசாமி அவர்கள் அண்மையில் இயற்கை எய்தியுள்ளார். அவர்களது ஆன்மா சாந்தியடைய வேண்டி இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

vi) அடுத்த கூட்டம் இதே அரங்கில் வரும் 14.10.18 அன்று நடைபெறுமென தெரிவிக்கப்பட்டது.

vii) இறுதியில் கிளையின் ஒருங்கிணைப்பாளர் பேரா. பழனிச்சாமி அவர்கள் நன்றி கூற ஈரோடு மாநாடு சிறக்க வேண்டும் என்றும் மாநாட்டில், நிலுவையிலுள்ள அனைத்து கோரிக்கைகளையும் வென்றெடுக்க வேண்டும். என்று உறுப்பினர்களை ஒருமித்த நிலையில் குரலெழுப்ப கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**முனைவர் V.பழனிச்சாமி**
செயலாளர், கரூர் கிளை

## பொள்ளாச்சி கிளை

பொள்ளாச்சி கிளையின் முதல் மாதக்கூட்டம் 09.09.2018 இரண்டாம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் பொள்ளாச்சி ந.க.ம. கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. முன்னாள் கல்லூரி முதல்வர் முனைவர் ப. சுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கிளைச் செயலாளர் முனைவர் மு. இராமச்சந்திரன் கூட்டத்திற்கு வருகை தந்த உறுப்பினர்களை வரவேற்று, கூட்ட



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



நிகழ்ச்சிகளைத் துவக்கி வைத்தார். ந.க.ம. கல்லூரி முதல்வர் பி.எம். பழனிச்சாமி அவர்கள் கலந்து கொண்டு கூட்டத்தினைச் சிறப்பித்தார்.

**கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பின் வருமாறு**

1. பணி ஓய்வு பெற்றவர்களுக்கு வருமானவரி விலக்கு அளிக்க வேண்டுமென மத்திய அரசைக் கேட்டுக்கொள்வதெனத் தீர்மானிக்கப்படுகிறது.
2. பேராசிரியர் எம். வெள்ளியங்கிரி அவர்கள் கொடுத்த தீர்மானத்தை மாநில ஆட்சிக்குழு நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.
3. நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரியில் ஆங்கிலத் துறையில் சுமார் 30 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய பேராசிரியர் S. சுந்தரராஜன் அவர்கள் 19.09.2018 அன்று இயற்கை எய்திய செய்தி அனைவரையும் வருத்தத்தில் ஆழ்த்தியது. அவரை இழந்து வாடும் குடும்பத்தார்க்கு பொள்ளாச்சி கிளை ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

TANRECTA வின் 18-வது மாநில மாநாட்டை முன்நின்று நடத்தும் ஈரோடு கிளைக்கு பொள்ளாச்சி கிளையின் சார்பாக வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எமது கிளையின் கீழ்க்கண்ட ஓய்வு பெற்ற பேராசிரியர்கள் இம்மாதம் புதிய உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம். 1. பேரா. பி.ஆர். கதிரேசன், ந.க.ம. கல்லூரி பொள்ளாச்சி, 2. பேரா. முனைவர் ப. வடிவேல், ந.க.ம. கல்லூரி பொள்ளாச்சி, 3. பேரா. கே. சிராஜ்ஜுதீன், ந.க.ம. கல்லூரி பொள்ளாச்சி, 4. பேரா. முனைவர் என். கணேசன், ந.க.ம. கல்லூரி பொள்ளாச்சி, 5. பேரா. கே.வி. ஜெய ஸ்ரீ, ந.க.ம. கல்லூரி பொள்ளாச்சி, 6. பேரா. எஸ்.எல்.டி.வி. வைத்தியநாதன் (ந.க.ம. கல்லூரி, பொள்ளாச்சி), 7. பேரா. ஆர். லலிதாபாய், ஜி.வி.ஜி. கல்லூரி உடுமலை, 8. பேரா. கே. பூமா (ஜி.வி.ஜி. கல்லூரி, உடுமலை) 9. பேரா. சு. சுப்ரமணியன், அரசு கலைக்கல்லூரி, உடுமலை, 10. பேரா. ஆ. சொக்கப்பன், அரசு கலைக்கல்லூரி, உடுமலை, 11. பேரா. ஆர். சந்திர சேகரன், அரசு கலைக்கல்லூரி, உடுமலை, 12. பேரா. கே. சிந்தாமணி (அரசு கலைக் கல்லூரி, உடுமலை), சிற்றுண்டி மற்றும் தேநீருக்குப் பின் கிளையின் பொருளாளர் பேராசிரியர் ஏ. பாலகங்காதரன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

**அடுத்த கூட்டம் வருகின்ற 14.10.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00மணியளவில் ந.க.ம. கல்லூரி வளாகத்தில் நடைபெறும்**

**பேரா. எம். இராமச்சந்திரன்**
செயலாளர், பொள்ளாச்சி கிளை

## தஞ்சாவூர் கிளை

எமது கிளையின் பொதுக்குழுக்கூட்டம் 09.09.2018 அன்று காலை 10.30மணியளவில் தஞ்சை மன்னர் சரபோசி அரசுக் கல்லூரியில் நடைபெற்றது. கிளைத் தலைவர் பேரா. P. குமாரவேலு அவர்கள் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்கள்.

முதலாவதாக தஞ்சாவூர் மன்னர் சரபோசிக் கல்லூரியில் விலங்கியல் பேராசிரியராகப் பணிபுரிந்த P.வேல்முருகன் அவர்கள் மறைவிற்கு(08.09.2018 மதியம் 12.00மணி) இரங்கல் தெரிவிக்கப்பட்டு 1 நிமிடம் மௌன அஞ்சலி அனுசரிக்கப்பட்டது.

பின்னர் கிளைப் பொருளாளர் போர. ஆ. இராமகிருஷ்ணன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். இந்த மாதம் பிறந்தநாள் கண்ட/காணும் பேராசிரியர்கள் P. சோமசுந்தரம், G.கல்யாணசுந்தரம், A. வெங்கடேஸ்வரன், M. முகமது உமர், S.சண்முகநாதன், டி.ஜெ.ஜெய சோழன், S.குலோத்துங்கன், அ. பன்னீர் செல்வம் ஆகியோருக்கு கிளையின் சார்பாக பிறந்த நாள் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

பின்னர் கிளைச் செயலாளர் முனைவர் வே. இராமசாமி அவர்கள் புதிய ஓய்வூதியம், அது தொடர்பாக கிளையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி உறுப்பினர்களுக்குத் தெரித்தார். ஈரோட்டில் நடைபெறவுள்ள 18-ஆவது மாநில மாநாட்டிற்கு உறுப்பினர்கள் திரளாக வரவேண்டுமென்றும், கேரளா வெள்ள நிவாரணத்திற்கு அனைவரும் மனமுவந்து நன்கொடையளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

திருச்சியில் நடைபெற்ற நமது அமைப்பின் மாநிலச் செயற்குழுவின் செய்திகளை பொருளாளர் பேரா. ஆ. இராமகிருஷ்ணன் உறுப்பினர்களிடம் பகிர்ந்து கொண்டார். கூட்டத்திற்கு நிரம்ப உறுப்பினர்கள் வந்திருந்து கருத்துப்பரிமாற்றம் செய்தது மகிழ்வாகவும், நிறைவாகவும் இருந்தது. பேராசிரியர்கள் முனைவர் மா. இராமலிங்கம் மற்றும் சி. வேலாயுதம் பெருமாள் ஓய்வூதியம் பற்றிய நுணுக்கங்களை உறுப்பினர்களிடம் பகிர்ந்து கொண்டனர்.

**இறுதியில் பொருளாளர் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது. அடுத்த கிளைப் பொதுக்குழுக்கூட்டம் 14.10.2018 அன்று காலை 10.30 மணிக்கு தஞ்சை மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரியில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டது.**

உறுப்பினர் கட்டணம் செலுத்தாதோர், கிளையின் வங்கிக்கணக்கில் செலுத்தி விபரத்தை செயலாளர் / பொருளாளருக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. நேரிலும் செலுத்தலாம். **Indian Bank, Rahman Nagar Branch, Thanjavur A/c No. 6490530954 IFSC - IDIB000R095.**

தீர்மானம் : நமது மூத்த உறுப்பினர் பேரா. P. வேல்முருகன் (விலங்கியல் பேராசிரியர்) 08.09.2018 இயற்கையெய்திய செய்தியறிந்து கிளைப்பொதுக்குழு வருத்த மடைகிறது. அவரது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தாருக்கு பொதுக்குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

**பேரா. வே. இராமசாமி**
செயலாளர், தஞ்சாவூர் கிளை



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



## விருதுநகர் கிளை

விருதுநகர் கிளையின் பொதுக்குழுக் கூட்டம் 08.09.2018 முற்பகல் 11.00 மணியளவில் விருதுநகர் பாண்டியன் நகர் சடுகுடுக்கா வகையறா V. இராமசாமி நாடார் திருமண அரங்கில் கிளைத்தலைவர் முனைவர் N. இன்பமணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் தலைவர் வரவேற்று தலைமையுரையாற்றினார். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இம்மாதம் பிறந்தநாள் காணும் நமது கிளையின் 2 உறுப்பினர்களை அவர்கள் மேலும் பல்லாண்டுகள் வாழ இக்கிளை அவர்களை வாழ்த்துகிறது.

2. கூட்டத்திற்கு வந்திருந்த அனைவருக்கும் நமது கிளையிலிருந்து மதிய உணவு வழங்கிய கிளைப் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் இக்கிளை நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

3. கிளைப்பொருளாளர் அவர்கள் இம்மாதம் TANRECTA கட்டிடநிதி வழங்கிய உறுப்பினர்களின் பெயர்களையும் அவர்கள் அளித்த தொகையையும் வாசிக்க கூட்டத்தில் அவர்களுக்கு நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவிக்கப்பட்டது சென்ற மாத தொடர்ச்சி தலா ரூ. 7000/- அளித்தவர்கள்.

விருதுநகர் VVV மகளிர் கல்லூரி 81. R. சந்தோஷ்குமாரி சிவகாசி ANJA கல்லூரி, 82. முனைவர் S. சேவகபாண்டியன், 83. முனைவர் E.K.R. நாகராஜன் 84. பேரா. K. அய்யாவு.... தொடரும்

4. நமது TANRECTA - வின் 18-வது மாநாட்டின் மலருக்கு அதிகமான விளம்பரங்கள் கொடுத்த அன்பர்களுக்கும், கிளை உறுப்பினர்களுக்கும் மற்றும் கிளை பொறுப்பாளர்களுக்கும் இக்கிளை நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

5. கேரளா வெள்ள நிவாரண நிதி வழங்கிய உறுப்பினர்களுக்கு இக்கிளை நன்றியைதெரிவித்துக் கொள்கிறது. நிதி அளித்த அன்பர்கள். தலா ரூ. 5000/- கொடுத்தவர்கள் 1. பேரா. S. சுப்ரமணியன், 2. பேரா. S. விமலாதேவி, தலா ரூ. 3000/- கொடுத்தவர்கள் 3. பேரா. M. தனலட்சுமி, 4. பேரா. சிவா ஜெயச்சந்திரன், 5. முனைவர் P.N. கமலா, 6. பேரா. M. ஜெயலட்சுமி, 7. பேரா. M. ராமச்சந்திரன் தலா ரூ. 2000/- கொடுத்தவர்கள் 8. பேரா. V. ஹரிராஜன், 9. T. ஜெயலட்சுமி 10. முனைவர் T. பூபதிகணேஷ், 11. பேரா. R. வேலுச்சாமி, 12. பேரா. மங்கையர்கரசி 13. முனைவர் P. முருகேஷ்வரி 14. பேரா. V. ஜெயலட்சுமி, தலா ரூ. 1500/- கொடுத்தவர்கள் 15. பேரா. N. மோகன், 16. பேரா. M. உமாராணி, தலா ரூ. 1000/ - கொடுத்தவர்கள் 17. பேரா. D. சந்திரசேகரன், 18. பேரா. குரியன் மேத்யூ, 19. பேரா. K. பொன்னம்மாள், 20. பேரா. K. ராம்தாஸ், 21. முனைவர் கந்தசாமி, 22. பேரா. S. மாரியப்பன், 23. முனைவர் K.M. கதிரேசன், 24. பேரா.S. முரளி, 25. முனைவர் S. சேவகபாண்டியன், 26. பேரா. P.K. சசீதரன், 27. பேரா. D. கதம்பராஜன், 28. பேரா. P.J. ஜோசப், 29. பேரா. அய்யாவு, 30. பேரா. S. நடராஜன், 31. முனைவர் N. இன்பமணி, 32. பேரா. C.R. சந்திரசேகரன், 33.

முனைவர் S. மாணிக்கவேல், 34. பேரா. S. சரஸ்வதி, 35. பேரா. B. ஜெயராமன், 36. பேரா. R. வீரபாண்டியன், ரூ. 600/- கொடுத்தவர் 37. பேரா. E. காளியப்பன் மொத்த வசூல் ரூ. 62600/- ஐ TANRECTA மாநில பொருளாளருக்கு அனுப்புவது என்று தீர்மானிக்கப்பட்டது.

6. சென்றமாதம் விடுபட்ட பேரா. C.R. சந்திரசேகர் அவர்களது விருந்து இம்மாதம் வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது.

7. 1.10.1979 முதல் 1.7.96 வரை உள்ள இந்த இடைப்பட்ட காலத்தில் ஓய்வு பெற்று முழு ஓய்வூதியபலன் பெறாதவர்கள் (33 ஆண்டுகள் பணிநிறைவு இல்லாதவர்கள்) G.O. Ms. No. 245-ன் படி (Ref. TANRECTA Speaks Sep. 2018 Page No. 11) அதற்குரிய படிவத்தில் தாங்கள் பணி செய்த கல்லூரி மூலமாக தங்களது ஓய்வூதியத்தை திருத்தி அமைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பேரா. S. கருப்பையா அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது. **அடுத்த மாதக் கூட்டம் 13.10.2018 இரண்டாம் சனிக்கிழமை அன்று முற்பகல் 11.00 மணிக்கு விருதுநகர் பாண்டியன் நகர் சடுகுடுக்கா வகையறா V. இராமசாமி நாடார் திருமண அரங்கில் நடைபெறும்.**

**பேரா. V. ஹரிராஜன்**
செயலாளர், விருதுநகர் கிளை
9244578418 / 9442178418

## கிருஷ்ணகிரி கிளை

எங்கள் கிளையின் செப்டம்பர் மாதக் கூட்டம் 08.09.2018 அன்று மாலை 5 மணியளவில் கிருஷ்ணகிரி புதிய பேருந்துநிலையம் அருகில் உள்ள ஆரியபவன் ஹோட்டலில் நடைபெற்றது. கிளைச் செயலாளர் தலைமை தாங்கினார். வருகைதந்துள்ள அனைவரையும் வரவேற்றார்.

அரசு கலைக் கல்லூரி, வரலாற்றுத் துறை பேராசிரியர் பேரா. M. சங்கரன் அவர்கள் 30.08.2018 அன்று இரவு இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

TANRECTA ஈரோடு கிளைச் செயலாளரும் மற்றும் மாநிலச் செயலாளரும் அனுப்பிய 18-ஆவது மாநில மாநாட்டின் அழைப்பிதழ்கள் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. அனைவரும் ஈரோடு மாநாட்டுக்கு வரவேண்டும் என்று கிளைச் செயலாளர் கேட்டுக் கொண்டார். கலந்து கொள்ள விருப்பம் தெரிவித்த உறுப்பினர்களின் பெயர் குறித்துக் கொள்ளப்பட்டது.

இந்த மாதம் பிறந்த நாள் கொண்டாடும் பேரா. K. முனுசாமி, பேரா. K. பயாஸ்பாச்சா, முனைவர் N.C. ஞானசேகரன் மற்றும் திருமண நாளைக் கொண்டாடும் பேரா. R. பாலசுப்ரமணியன் அவர்களுக்கும் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டன. முனைவர் N.C. ஞானசேகரன் அவர்கள் தன்னுடைய பிறந்தநாளை முன்னிட்டு அனைவருக்கும் இனிப்பு சிற்றுண்டி மற்றும் தேநீர் வழங்கினார். கிளைப் பொருளாளர் பேரா. K. வேலுசாமி, விருந்தளித்த முனைவர் N.C. ஞானசேகரனுக்கும் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். இத்துடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.



Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



**பேரா. மா. அற்புதமணி**
செயலாளர், கிருஷ்ணகிரிகிளை

## பரமத்தி வேலூர் கிளை

பரமத்தி வேலூர் கிளை கிளையின் செப்டம்பர் மாதக் கூட்டம் வேலூர் சவுத் இந்தியன் ரெசிடென்சி உணவக அரங்கில் 08.09.2018 மாலை 06.30 மணியளவில் தலைவர் பேரா. முனைவர் R. சுப்ரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. துணைத்தலைவர் N. சாம்பன் அவர்களின் வர வேற்புரைக்குப் பின் செயலர் தமது உரையில் திருச்சியில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட பொருள்கள் குறித்து விளக்கி பேசினார். செப்டெம்பர் 29 ஆம் தேதி ஈரோட்டில் நடைபெறும் 18வது மாநில மாநாட்டுக்கு உறுப்பினர்கள் பெருமளவில் கலந்து கொள்ள வேண்டுகோள் விடுக்கப்பட்டது. மாநாட்டு மலருக்கான விளம்பரங்கள் பெறப்பட்டு அனுப்பி வைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இம்மாதம் பிறந்த நாள் காணும் பேரா. K.K. சவான் சாகிப் அவர்களுக்கும், மணநாள் காணும் பேராசிரியர்கள் பேரா. C. லோகநாதன், பேரா. N. சாம்பன், பேரா.அன்பழகன் (தமிழ்த்துறை) ஆகியோருக்கும் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. மேற்கண்ட பேராசிரியர்கள் வழங்கிய சிற்றுண்டிக்கு உறுப்பினர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டார்கள்.

துணைச் செயலர் பேரா. P. தண்டபாணி அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவடைந்தது. **கிளையின் அடுத்த கூட்டம் 13.10.2018 அன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.**

முனைவர் **T.P.J. பாரதி**
கிளைச் செயலர், பரமத்திவேரலூர் கிளை.

## மயிலாடுதுறை கிளை

**இரங்கல் செய்தி :**

23.9.2018 அன்று எங்கள் கிளை உறுப்பினர் பேரா. K.V. சுப்ரமணியம் அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கிறோம்.

பேரா. **சிவ.முருகேசன்,**
செயலர், மயிலாடுதுறை கிளை